விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 174 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 237 திங்கட்கிழமை (10.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## தமிழ்ப் பொது வேட்பாளர் சிறந்த தீர்மானம் அல்ல

### பேராசிரியர் சர்வேஸ்வரன் கருத்து



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழர் தரப்பின் சார்பில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது ஒரு சிறந்த தீர்மானம் அல்ல என 02

## இலங்கையின் நீதி, பொறுப்புக்கூறலுக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு

### பெத்வான் ஷாக் தெரிவிப்பு

06ஆம் பக்கம் பார்க்க

## மத்திய வங்கியை கட்டுப்படுத்த முடியாது

### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

அரசாங்கம் விரும்பியபடி மத்திய வங்கி செயற்படாது. அரசாங்கம் மத்திய வங்கிக்கு பணத்தை அச்சிட உத்தரவிட முடியாது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம் 02

## வடக்குக் கிழக்கு மக்கள் இழந்த உரிமைகளை மீட்டுக் கொடுப்பேன்

- 13ஆவது திருத்தச் சட்டமூலம் அமுலாகும்
- கிளிநொச்சியில் சஜித் உறுதி



(கிளிநொச்சி)

ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றி பெற்றதும் நாட்டில் 13ஆவது திருத்தச் சட்டமூலம் முழுமையாக அமுல்படுத்தப்படும்.

இதன்மூலம் வடக்கு - கிழக்கு வாழ் மக்கள் இழந்த சமய, சமூக, அரசியல் உரிமைகளை அவர்களுக்கு நிச்சயம் மீட்டுக் கொடுப்பேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## வேலைநிறுத்தம் செய்ய இது சரியான நேரமல்ல


### சாகல ரத்னாயக்க



(கொழும்பு)

சம்பள முரண்பாடுகள் குறித்து போராட்டங்கள் மேற்கொள்ளவும் வேலை நிறுத்தங்கள் 02

## 3ஆவது தடவை பிரதமராக பதவியேற்றார் மோடி



(புதுடில்லி)

இந்தியாவில் நடைபெற்று முடிந்த மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்றதையடுத்து மூன்றாவது முறையாகவும் நரேந்திர மோடி பாரதப் பிரதமராக நேற்று பதவியேற்றுள்ளார்.

பதவியேற்கும் உத்தியோகப்பூர்வ நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை 15

## தையிட்டியில் மீண்டும் காணி அளவீடு!

### இரகசியமாக முன்னெடுக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தையிட்டி விகாரை அமைந்துள்ள பகுதியை மீளவும் கொழும்பில் உள்ள நில அளவைத் திணைக்களத்தினரைப் பயன்படுத்தி அளவீடு செய்வதற்கான முயற்சிகள் இரகசியமான 15

## வந்தார் ரணில் வந்துள்ளார் சஜித் வருவார் அநுர

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக வடக்குக்கான விஜயமொன்றை மேற்கொண்டு விரைவில் வரவுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் 15

## பெற்ற பட்டத்தை பாடையில் வைத்து வேலையில்லாப் பட்டதாரிகள் போராட்டம்

### யாழ்.செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)

தாம் பெற்ற பட்டத்தினை பாடையில் ஏற்றி 'பட்டம் வீட்டில்; பட்டதாரிகள் நடு ரோட்டில்' எனும் கோசத்தோடு வேலையில்லாப் பட்டதாரிகளால் 15

## அலி சப்ரி ரஷ்யா பயணம்

(கொழும்பு)

ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் அழைப் 15

## போதை மாத்திரை, வாளுடன் 4 இளைஞர்கள் யாழில் கைது



15

## டலஸ் அழகப்பெரும ஐ.ம.சக்தியில் இணைவு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, சரித ஹேரத் ஆகியோர் விரைவில் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணையவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கான பேச்சுகள் வெற்றியளித்துள்ளன எனவும், விரைவில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச் 02

## ரயில் சாரதிகளின் போராட்டத்தால் ரயில் சேவைகள் ஸ்தம்பிதம்

(கொழும்பு)

ரயில் இயந்திர சாரதிகள் ஆரம்பித்துள்ள பணிப் புறக்கணிப்பு போராட்டம் காரணமாக நேற்றும் 35க்கும் மேற்பட்ட ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள் ளது.

இதேவேளை இன்றும் 4ஆவது நாளாகவும் பணிப் புறக்கணிப்பு போராட்டம் தொடரும் என லோகோமோட்டிவ் ஆப்பரேட்டிங் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

லங்கா மஹால் (PVT) LTD
DHL
உள்நாட்டு. வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | - 1490/= | சுவிஸ் | - 2050/= |
| கனடா | - 2290/= | பிரான்ஸ் | - 2290/= |
| லண்டன் | - 1250/= | அவுஸ்திரேலியா | - 2350/= |
| அமெரிக்கா | - 2290/= | இத்தாலி | - 2490/= |
| ஜேர்மனி | - 2250/= | நோர்வே | - 2050/= |

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு
077 8393 974

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்து தரப்படும்.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம். (1165)



யாழ்ப்பாணம் திருவண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளி அம்பாள் ஆலய நூதன திரிதள இராஜகோபுர பஞ்சகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் நேற்று காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

*படங்கள் :ஐ.சிவசாந்தன்*

# சம்பந்தனும் சுமந்திரனும் தமிழின எதிரிகள்

## தமிழ் மக்களுக்கு நாம் தீர்வு தருவோம் பெரமுன தேசிய ஏற்பாட்டாளர் ரோஹித

(கொழும்பு)

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களான இரா.சம்பந்தனும், எம்.ஏ. சுமந்திரனும் தமிழினத்துக்குத் துரோகம் செய்தவர்கள்." என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய ஏற்பாட்டாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப் பல தடவைகள் முன்வந்தபோது சம்பந்தனும், சுமந்திரனுமே அதனைக் குழப்பியடித்தார்கள்.

அவர்கள் இருவரும் ராஜபக்ஷக்களுக்கு எதிரான சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரலில் செயற்படுபவர்கள்.

வெளிநாடுகளிடம் நிதியைப் பெற்றுக்கொண்டு தமிழினத்துக்குத் துரோகம் செய்த அவர்கள் இருவருக்கும் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும். அவர்களின் கட்சியும் அந்தத் தேர்தலில் படுதோல்வியடைய வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுனவே வெற்றியடையும். எனவே, தமிழ் மக்கள் எமது கட்சியின் பின்னால் அணிதிரள வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நாம் தீர்வு வழங்குவோம் என்றார்.

(ந-7,10)

# மின்சார சபையை தனியார்மயப்படுத்த அரசாங்கம் தொடர்ந்தும் தீவிர முயற்சி

## ஐ.ம.சக்தி சுட்டிக்காட்டு

இலங்கை மின்சார சபையின் நிர்வாகத்தை சீரழித்து 12 பங்குகளாக பிரித்து தனியார்மயமாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் இதனை திருத்தியமைத்து புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

புதிய மின்சார சட்டம் தொடர்பில் உயர் நீதிமன்றம் வரை சென்று மக்கள் உரிமையை ஐக்கிய மக்கள் சக்தி பாதுகாத்துள்ளது. புதிய மின்சார சட்டத்தின் மூலம் அமைச்சருக்கு குவிக்கப்பட்ட அதிகாரங்களை எமது ஆட்சியில் குறைப்போம்.

மன்னார் மற்றும் பூநகரி ஆகிய பகுதிகளில் நிர்மாணிக்கப்படவுள்ள அதானி நிறுவனத்தின் "அதானி கிரீன் எனர்ஜி" காற்றாலை மின் உற்பத்தியின் ஊடாக மின்சாரத்தை 20 வருடங்களுக்கு கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

அதானியிடமிருந்து 32.8 டொலருக்கு மின்சாரத்தை கொள்வனவு செய்கின்றனர். இது மக்கள் உரிமையை மீறும் செயலாகும். புதிய மின்சார சட்டத்தின் ஊடாக ஊழல் மேலும் அதிகரிக்கும். ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் இதனை திருத்தியமைத்து புதிய சட்டமொன்றை முன்வைப்போம் என்றார். (ந-7,10)

## டலஸ்...

சாத் திடப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது. அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களான ரொஷான் ரணசிங்க, தயாசிறி ஜயசேகர ஆகியோரும் சஜித் கூட்டணியில் இணைவதற்குத் திட்டமிட்டுள்ளனர். (ந-7,10)

## மத்திய...

பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

மத்திய வங்கியின் சுதந்திரம் குறித்து நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. இப்போது இந்த சம்பளப் பிரச்சினை ஒரு கோணத்தில் மட்டுமே பார்க்கப்படுகிறது.

3 ட்ரில்லியன் நாணயத் தாள்கள் கடந்த காலத்தில் அச்சிடப்பட்டது. மத்திய வங்கி சுயாதீனமாக இருந்தாலும், மத்திய வங்கி பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டும். உதாரணமாக, சம்பளப் பிரச்சினை எழுப்பப்பட்ட போது, மத்திய வங்கியின் ஆளுநரும் மற்றவர்களும் பாராளுமன்றத்திற்கும் நிதிக் குழுவிற்கும் அழைக்கப்பட்டனர்.

மேலும் அந்த சம்பள உயர்வு தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. மத்திய வங்கி சுதந்திரமாக மாறினாலும் சில விதிமுறைகளுக்கு உட்பட்டுள்ளதை காணமுடிகிறது என குறிப்பிட்டுள்ளார்.

(ந-7,10)

## தமிழ்ப்...

கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறைப் பேராசிரியர் அ.சர்வவேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அறிவோர் ஒன்றுகூடும் அரசியல் கருத்துக்களம் நேற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் தொடக்கவுரையாற்றும் போதே பேராசிரியர் சர்வேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

சுயநிர்ணய உரிமைக்கான பொதுவாக்கெடுப்பை நடத்தும் போது அதற்கு ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் ஒன்றாக வாக்களிப்பார்.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும்போது அனைத்து தமிழ் மக்களும் அதற்கு வாக்களிப்பர் எனக் கருத முடியாது.

ஏனெனில் பொதுவேட்பாளர் தொடர்பில் நம் தமிழ்த் தரப்பில் வெவ்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

ஒரு தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்த வேண்டும் எனக் கூறுகின்ற அதே நேரத்தில், இன்னொரு தமிழ்த் தரப்பு ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் எனக் கோருகின்றது.

அதே போன்று தமிழ் பொது வேட்பாளர் யார்?. அவரை எப்படி தெரிவு செய்வது? குறித்த வேட்பாளர் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் விருப்பத்திற்கு உரியவரா? என்ற கேள்விகளும் எழும்.

எல்லாவற்றிற்கும் மேலாக 2024 ஆம் ஆண்டில் நடைபெறுகின்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவோம் ஆயின், அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் என்ற நிலைப்பாடு எவ்வாறாக இருக்கும் என்ற கேள்வி எழுவதிலும் நியாயம் உள்ளது.

ஆக, பொது வேட்பாளர் என்ற விடயத்தில் தீர்மானங்களை எடுத்துவிட்டு நியாயங்களைத் தேடக் கூடாது. மாறாக நியாயங்களை வைத்துக்கொண்டே தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்குப் போட வேண்டாம் என்று நான் கூறவில்லை தமிழ் பொது வேட்பாளரை போட வேண்டாமென்றே நான் கேட்கிறேன் என்றார்.

இக்கருத்துக்களத்தில், அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மருத்துவர் சத்தியலிங்கம், சட்டத்தரணி கே.சயந்தன் உட்படப் பலரும் கருத்துரை வழங்கினர். (ந)

## வேலை...

மேற்கொள்ள இது காலமல்ல என ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானியும் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர், நம் நாட்டில் பல்வேறு சம்பள முரண்பாடுகள் உருவாகியுள்ளதாகவும் ஒழுங்கு முறையில் சம்பள ஏற்பாடுகள் செய்யாததாலும், பல்வேறு கால கட்டங்களில் துரித பதில்களை வழங்க நடவடிக்கை எடுக்காததமையே இந்த நிலைமைக்கு காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பள முரண்பாடு குறித்து முறையான ஆய்வு நடத்தி அறிக்கை தயாரிக்க கடந்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும், ஆனால் இது மக்கள் சிரமப்படும் சந்தர்ப்பம் என்பதுடன், நாடு பெரும் பொருளாதார சிக்கலை எதிர்கொண்டு, மீண்டும் பொருளாதார ரீதியில் ஸ்திர நிலைமையை அடைந்திருந்தாலும் அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, வேலைநிறுத்தம் செய்வதற்கு இது சரியான நேரம் அல்ல என்பதால், அனைத்து அரச அதிகாரிகளும் இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு செயல்படுமாறு கோரிக்கை விடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் உங்கள் பிரச்சினைகளை நாம் ஒருபோதும் புறக்கணிக்க மாட்டோம் எனவும் அதுபற்றிய புரிதல் எமக்கு உள்ளதுடன் அவற்றைத் தீர்ப்பதற்குத் தேவையான வேலைத் திட்டத்தையும் தயாரித்துள்ளதாகவும் சாகல ரத்னாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ந-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மிகு ஞானவைரவர் துணை

ஸ்ரீ மஹாகணபதி துணை ஸ்ரீ ஷண்முகநாதன் துணை



## அராலி வடக்கு நாகேந்திரமடம்
## புளியடி ஸ்ரீ ஞான பைரவர் ஆலய
## ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன
# மஹாகும்பாபிஷேகம்
## 2024

**கர்மாரம்பம்**
09.06.2024
ஞாயிற்றுக்கிழமை

**எண்ணைக்காப்பு**
11.06.2024 செவ்வாய்க்கிழமை
காலை 9.00 மணிமுதல்
மாலை 3.00மணிவரை

**த்யானம்**

ரக்தஜ்வாலா ஜடாதரம் ஸிவிமலம்
ரக்தாங்க தேஜோமயம்!
த் ருத்வா சூல கபால பாச ட மரூன்
லோகஸ்ப ரஷாகரம்
நிர்வாணம் சுனவாஹனம் த்ரிநயனம்
ஆனந்த கோலாஹலம்
வந்தே பூத பிசாசநாத வடுகம்
ஷேத்ரஸ்ய பாலம் சிவம்

**மஹாகும்பாபிஷேகம்**
12.06.2024
புதன்கிழமை

எம்பெருமான் அடியார்களே!

நிகழும் மங்களகரமான குரோதி வருடம் வைகாசி மாதம் 30ஆம் நாள் (12.6.2024) புதன்கிழமையும் சுக்லபக்ஷ ஷஷ்டியும் மகநக்ஷத்திரமும் சித்தயோகமும் குருஹோரையும் நேத்ரஜீவ பெலமும் கூடிய சுபயோக சுபதினத்தில் உதயாதி நாழிகை 11.15 க்கு மேல் 15க்குள் காலை காலை மணி 11.00 முதல் நண்பகல் 12.00 மணிவரையுள்ள சிம்ம லக்கினத்தில் அருள்மிகு ஞானவைரவர் சுவாமிக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

## கிரியாகால நிகழ்வுகள்

குரோதி வருடம் வைகாசி மாதம் 27ம் நாள் (09.06.2024) ஞாயிறு அதிகாலை சூர்யோதயத்தில் கர்மா ஆரம்பம். விநாயகர் வழிபாடு, அனுக்ஞை, த்ரவ்யசுத்தி, தனபூஜை திரவ்யஹோமம், கணபதிஹோமம், லெக்ஷ்மிஹோமம், சுதர்சனஹோமம், வாஸ்துசாந்தி கோவாசம், நவக்ரஹமகம், கோபூஜை, கஜபூஜை, யந்த்ரபூஜை கங்கா தீர்த்த ஸங்க்ரஹணம்,சூர்யாக்னி ஸங்க்ரஹனம் அனைத்தும் அதிகாலை 5.30 மணிமுதல் காலை 10.30 மணிவரை அனைத்து கிரியைகளும் நடைபெறும்.

பிற்பகல் 3.30 மணியளவில் கிராமசாந்தி. பிரவேசபலி, திசாஹோமம், ராக்ஷோக்ன ஹோமம், மூர்த்தி ஹோமம், சாந்தி ஹோமம், மாலை 5மணிமுதல் மருத்ஸங்க்ரஹணம். அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம். கலாகர்ஷணம், ஜீவகும்பங்கள், யாகசாலா ப்ரவேசம். முதற்காலபூஜை, ஸ்தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், தீபாராதனை வேத தோத்ரபாராயணம், திருமுறை பாராயணம், பிரசாதம் வழங்குதல்.

வைகாசி 28ம் தேதி (10.06.2024) திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் விநாயகர் வழிபாடு, விசேடசந்தி இரண்டாம் காலை யாகசாலைபூஜை ஹோமம் (யாகபூஜை) தீபாராதனை வேத - தோத்திர - திருமுறை பாராயணம் பிரசாதம் வழங்குதல். மாலை 5.30 மணிமுதல் விநாயகர் வழிபாடு, விசேடசந்தி மூன்றாம் கால யாக சாலை பூஜை யாகபூஜை தீபாராதனை வேத - தோத்ர திருமுறைய பாராயணம் பிரசாதம் வழங்குதல்.

வைகாசி 29ஆம் திகதி (11.06.2024) செவ்வாய்க்கிழமை காலை 9மணிமுதல் விநாயகர் வழிபாடு விசேடசந்தி நான்காம் காலயாகசாலை பூஜை யாக பூஜை தீபாராதனை வேத தோத்திர திருமுறை பாராயணம் பிரசாதம் வழங்குதல். மாலை 5.30 மணிமுதல் விநாயகர் வழிபாடு விசேடசந்தி ஐந்தாம் கால யாகசாலை பூஜை ஆரம்பம் ஹோமம் ஆரம்பம் தீபாராதனை வேத தோத்ர திருமுறை பாராயணம் பிரசாதம் வழங்குதல்.

வைகாசி 30ஆம் திகதி (12.06.2024) புதன்கிழமை அதிகாலை 5மணிமுதல் விநாயகர் வழிபாடு 6ஆம் காலயாக பூஜை ஸ்பர்சாகுதி மஹாபூர்ணாஹுதி விசேடதீபாராதனை ஆசீர்வாதம் வேத தோத்ர திருமுறை பாராயணம் யாத்ரா தானாதிகள். 11 மணிக்குமேல் ஜீவகும்பங்கள் எழுந்தருளல் 11.20 மணிக்கு ஸகலஸ்தூபிகள் கலசங்கள் ஸமகாலத்தில் அபிஷேகம் தொடர்ந்து காலை 11.40 மணிக்கு அருள்மிகு ஞானவைரவர் சுவாமிக்கும் மற்றும் பரிவாரமூர்த்திகளுக்கும் சமகாலத்தில் மஹாகும்பாபிஷேகம் அதனைத் தொடர்ந்து தசதர்சனம் ஆசீர்வாதம் ஆசியுரை மஹாபிஷேகம் விசேட பூஜை நடைபெறும். விபூதி பிரசாதம் வழங்கல் மகேஸ்வர பூஜை (அன்னதானம்)நடைபெறும்.

**நல்லாசிகள் வழங்கும் குருமார்**

சிவஸ்ரீ. ஸ்ரீசாங்கர் குருக்கள்
தருமை ஆதீன ஆகமப்பிரவீணா
தருமை ஆதீன சிவகாம கலாநிதி
ஐ. கைலாஸநாத வாமதேவக் குருக்கள்
நயினைநாகபூசணி அம்மன் ஆலய ஆதீனகுரு
கு. திலீபாலா சர்மா
சிவகாம கிரியாபூஷணம் கிரியாகிரம சோதிடபூஷணம்
சோதிட கலாநிதி சாஸ்ரீ தேசமானியா
"வேதசாஸ்திர ஞான நிபுண", "கும்பாபிஷேக பூஷணம்"
சிவஸ்ரீ. தியாகராஜ. சர்வேஸ்வரக்குருக்கள்
முத்து ஸ்ரீனிவாசக்குருக்கள் - நல்லூர்
நாகேந்திரக்குருக்கள் சோமாஸ்கந்தசர்மா
நாகேந்திரமடம் சிவன் கோவில்

**பிரதிஷ்டா பிரதமகுரு**

*கிரியாதத்துவநிதி (ஈசான சிவம்)*
திருக்கையிலை மணி பிரம்மஸ்ரீ R. சிவஸ்வாமிசாஸ்திரி
திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோவில் விதாயகர்த்தா

**பாகசாலை**
அனீஷ் அசோக்
அய்யப்பன்
கதிரவன்

**ஆலய குரு**
சு.வர்மன்சர்மா

**பஞ்சவாத்யம்**
முருகன்
மந்த்ரம்
சங்கர்

**சர்வசாதகம்**

திருக்கையிலை மணி P.S.V. கெணபதி ஷங்கர் தீக்ஷிதர்
திருக்கையிலை மணி M. தேவமணிகண்டவாத்யார்
திருக்கையிலை மணி V. ராமசுப்பிரமணிய வாத்யார்
திருக்கையிலை மணி T. கிருஷ்ணமூர்த்திசர்மா
திருக்கையிலை மணி S.H.S. ஹரிகரசர்மா
ப்ரம்ஸ்ரீ R. பரமேஸ்வர சர்மா
ப்ரம்மஸ்ரீ K. மணிகண்ட சர்மா
ப்ரம்மஸ்ரீ K. கெணபதி சர்மா
ப்ரம்மஸ்ரீ H. சுந்தர்ராம சர்மா

**ஆலய அமைப்பு**
Dr.K.தட்சிணாமூர்த்தி ஸ்தபதி Ph.D
[illegible]

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

இவன்
வேதநெறிச்செல்வன்
திருக்குமாரன் நடேசன்
அற்புதவாசா, அராலி வடக்கு


(சி-565)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நடப்புச் சம்பியனை வீழ்த்தியது அவுஸி





ரி-20 உலகக் கோப்பைத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 17ஆவது லீக் போட்டியில் அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதின. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணி முதலில் பந்துவீச முடிவு செய்தது.

இதைத் தொடர்ந்து பட்டிங் செய்த அவுஸ்திரேலியா அணிக்கு டிராவிஸ் ஹெட் மற்றும் டேவிட் வார்னர் சிறப்பான தொடக்கத்தை கொடுத்தனர். இந்த ஜோடி முறையே 34 மற்றும் 39 ரன்களில் ஆட்டமிழந்ததையடுத்து வந்த கப்டன் மிட்செல் மார்ஷ் 35 ரன்களையும், கிளென் மேக்ஸ்வெல் 28 ரன்களையும் சேர்த்தனர்.

இவர்களை தொடர்ந்து களமிறங்கிய மார்கஸ் ஸ்டாயினிஸ் 30 ரன்களில் ஆட்டமிழந்தார்.

போட்டி முடிவில் அவுஸ்திரேலியா அணி 7 விக்கெட்டுகளை இழந்து 201 ரன்களை குவித்தது. இங்கிலாந்து சார்பில் கிரிஸ் ஜார்டன் 2 விக்கெட்டுகளையும், மொயின் அலி, ஜோஃப்ரா ஆர்ச்சர், ஆதில் ரஷித் மற்றும் லியம் லிவிங்ஸ்டன் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

202 ரன்களை துரத்திய இங்கிலாந்து அணிக்கு பில்சால்ட் மற்றும் கப்டன் ஜாஸ் பட்லர் ஜோடி சிறப்பான தொடக்கம் கொடுத்தது.

இருவரும் முறையே 37 மற்றும் 42 ரன்களை சேர்த்தனர். அடுத்து வந்த வில் ஜாக்ஸ், மொயின் அலி மற்றும் ஹாரி புரூக் முறையே 25 மற்றும் 20 ரன்களை சேர்த்தனர். ஒருபக்கம் ரன்கள் சேர்த்த போதிலும், சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் சரிந்தன.

இதன் காரணமாக இங்கிலாந்து அணி போட்டி முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 165 ரன்களை மட்டுமே சேர்த்தது. இதன் மூலம் அவுஸ்திரேலியா அணி 36 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (ரி-6)




தருண்




யதிஸ்ரன்




மதி




வதனா




வனேஸ்




ஜோதி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர் [illegible] facebook [illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நூலக தகவல் விஞ்ஞானத்துறையின் அபிவிருத்தியும் எதிர்காலத் திட்டமிடலும் கலந்துரையாடல் நிகழ்வு எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பொதுசன நூலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலந்துரையாடல் நிகழ்வில் இத்துறையில் ஆர்வம் கொண்டவர்களை கலந்து கொள்ளு மாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (நி-6)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 16 ஆம் திகதி அன்று மாலை 3.30 மணிக்கு தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பாலர் ஞானோதய சபைக்கான புதிய நிர்வாகத் தெரிவும் பாலர் ஞானோதய சபையின் எதிர்காலச் செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. (நி-6-33)

## நீராவியடி விநாயகர் கொடியேற்றம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடி அருள்மிகு ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகராலய குரோதி வருஷ மஹோற்சவமானது இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்களாக பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

மஹோற்சவத்தில் எதிர்வரும் 20.06.2024 வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் சண்டேஸ்வரர் உற்சவமும் இடம் பெறவுள்ளது. (நி-6)

# 31 ஆம் நாள் நினைவலைகள்






அமரர்.திருமதி.

## பரமேஸ்வரி பரமநாதன்

சாவிலும் சரித்திர
சாதனை,
வாழ்விலும் வசந்த
வாசனை,
மானுடரில் ஓர்
மாணிக்கமா?
மாப்பாணர் இணையான
மாணிக்கம் தந்த
முதல் மகவா?
எதுவாகிலும்,
அவளே முதல் இடத்தில்
மாநகராட்சியின் (யாழ்)
மருத்துவத் துறையை
மாண்புற ஆண்டாள்.

மூன்றெழுத்துச்
சொல்தான்
அம்மா - ஆனால்
மூச்செடுக்கும்
உயிர்களுக்கெல்லாம்
அவளே அன்னை
சோதரிகளுக்குக்
கன்னித் தாயாக
வாழ்ந்த - அவள்
பரமநாதன் கரம்
பிடித்து
கஜரூப தேவியென
இரு மகன்களின்
தாயாகினாள்.

கால ஓட்டத்தில்
சகோதர
சகோதரிகளின்
மகவுகளுக்கும்
மறு(ரு)மகவுகளுக்கும்
அவளே தாயானாள்.

உருண்டோடிய
காலச் சக்கரத்தில்
பேரன் பேர்த்திகளையும்
அன்புடனும்
அக்கறையுடனும்
அரவணைத்து
அன்னையாகினாள்.

புரட்சியில்
புது இலக்கணம்,
பெண்ணியத்தில்
புது இலக்கியம்,
இளமையிலே
எமக்கூட்டிவிட்டாள்
மணக்கொடை
அது தவறென்று!

முன்னாளில்
ஆண்டது
எண்பதுகளிலேயே
முதல் பெண்ணாய்
ஓட்டிவிட்டாள் உந்துருளி
பின்னாளில் அதுவே
அவள் அடையாளம்
வடக்கில்

மாநகரில்
சுகாதார தாதிய
பணிக்கென
பல வெள்ளுடைத்
தேவதைகளை
பல் வடிவங்களில்
உருவாக்கிவிட்டாள்,
ஆரோக்கிய சமூக
வாழ்வுக்கென

ஆன்மீகம் அது
தெய்வீகம்,
ஆலயத்தொண்டு அது
தார்மீகம்,
ஆளில்லா நேரத்தில்
கோவில் பூசகருக்கு
மணியடித்தல்,
தீபமேற்றலென
கையுதவி,
புராண படலமோதலென
இறைபணியும்
ஆற்றினார் .

இறைவனையும்
போற்றினார்
இறைவனிடம்
கேட்டவரம் பெற்றார்
தன்னை,
தன்னுறவை,
தன்சமூகத்தை
வளர்த்தார்.
தமிழை வளர்த்தார்
தமிழை வாழவைத்தார்
பூவுலகில்
தன்கடமை முடித்தார்
கைப்பிடித்த பரமநாதன்
கைவிடுத்து
பரமபதமடைந்துவிட்டார்
பரமேஸ்வரி எனும்
எம் தாய்

பரபுத்தரன்

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி.

இல,12/2 வில்வந்தெரு,
அரியாலை,யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள்
நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.

### அவைத் தலைவரின் உள்ளத்திலிருந்து...

அமரர்.திருமதி பரமேஸ்வரி பரமநாதன் நான் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளராக இருந்த காலத்தில் ஒரு பொது சுகாதார தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றியவர்.மிகவும் கடமை உணர்வுள்ள, அர்ப்பணிப்பாக, பொறுமையுடன் சகலரையும் மதிப்பவராக சேவையாற்றிய ஒருவராவார்.

தமது சக பணியாளர்களுடன் அந்நியோன்யமாக பழகிய அதேநேரம் மேலதிகாரிகளையும் மதித்து நடந்து எல்லோரது நன் மதிப்பையும் பெற்றவர்.

இக்கட்டான காலங்களில் மக்கள் நலன்சார்ந்து காலநேரம் பாராது கடமையாற்றிய ஒருவர்.எவருக்கும் கெடுதல் நினைக்காத மனப்பாங்கை கொண்டவரான இவரது ஆன்மா இறைவன் பாதத்தில் அமைதி பெறப் பிரார்த்திப்பதுடன் இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சீ.வீ.கே.சிவஞானம்,
அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை,
904/5.பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

### தகைசார்ந்த தாய்...

அமரர்.திருமதி.பரமேஸ்வரி பரமநாதன் அவர்களின் மறைவு நம் மண்ணுக்குப் பேரிழப்பாகும். 1991 தொடக்கம் 1998 வரை யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமையாற்று கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அங்கு சுகாதார வைத்திய அதிகாரியாக வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் அவர்கள் பணியாற்றினார். அப்போது பொது சுகாதார தாதிய சகோதரியாக திருமதி பரமேஸ்வரி பரமநாதன் அவர்கள் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

தாதிய சேவையில் மிக உன்னதமான தகைமை அவருடையது. வடமாகாணத்தில் அந்தத் தகைமையில் இருந்த ஒரே ஒருவர் திருமதி பரமேஸ்வரி பரமநாதன் என்றால், அவரின் பெருமை எத்துணை என்பதை நாம் உணர முடியும். பொது சுகாதாரத் தாதிய சகோதரியாக இருந்து அவர் நம் மக்களுக்கு ஆற்றிய சேவை ஒருபோதும் மறப்பதற்குரியது அல்ல.

போர்க்கால சூழலிலும் தாய் சேய் நல சிகிச்சைகள் யாழ் மாநகர சபை எல்லைக்குள் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு அவர் ஆற்றிய சேவை இவ்வேளையில் நினைவு கூரப்பட வேண்டும். குடும்ப நல சேவையாளர்களின் தாயாக, தளபதியாக இருந்து அவர்களை வழிப்படுத்திச் சுகாதார சேவை சிறப்பாக நடப்பதற்கு திருமதி பரமேஸ்வரி பரமநாதன் அவர்கள் ஆற்றிய பணிக்கு இறைவனின் ஆசி நிச்சயம் உண்டு.

இவற்றுக்கு மேலாக, குடும்ப நல சேவையாளர்களுக்கும், தாதிய உத்தியோகத்தர்களுக்கும் சுகநல கல்வியை வழங்குகின்ற மிகச்சிறந்த போதனாசிரியராகவும் அவர் விளங்கினார். அவரின் அர்ப்பணிப்பான சேவைக்கு திரிகரண சுத்தியோடு நன்றி கூறிக் கொள்வதுடன் அவரின் ஆன்மா.இறைபரம்பொருளின் திருவடிகளில் பேரின்பமடைய பிரார்த்[illegible]

ந.விஜயசுந்தரம், [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விவசாய குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விவசாய குழுக்கூட்டம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் கடந்த வியாழக்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மாவட்ட விவசாயம் சார்ந்த பிரச்சினைகளை இனங்காணல் மற்றும் மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடி அவற்றிற்கு தீர்வுகாண்பதன் மூலம் மாவட்ட விவசாயத்தை மேம்படுத்தி ஆரோக்கியமான விவசாய செய்கையை மேற்கொள்ளத் தூண்டும் வகையில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

இக் கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபர் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மாவட்டமாக யாழ். மாவட்டம் காணப்படுகின்றது. இளைஞர் யுவதிகளை விவசாய நவீன மயப்படுத்தல் திட்டத்தினுள் உள்ளீர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு அனைவரதும் பங்களிப்பும் அவசியம் எனவும், இளம் விவசாயிகளை இக் கலந்துரையாடலில் இணைத்து அடுத்த கலந்துரையாடலை மேற்கொள்ளுவதன் மூலம் இளைய சமுதாயத்தை நவீன விவசாயத்தை நோக்கி உள்ளீர்க்க முடியும் எனவும் தெரிவித்திருந்தார்.

மேலும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கில் கால்நடைகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் கால்நடைகளுக்கு கொட்டகை வசதிகளை ஏற்படுத்தல், இளம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்கல் மற்றும் ஊக்குவிக்கும் செயற்றிட்டமும் இதனை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும், வங்கிகளினால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் விவசாய கடன்கள் பற்றிய தெளிவூட்டல்கள் மற்றும் விவசாய காப்புறுதி திட்டங்கள் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. (நி-6)

## 2025 ஆம் ஆண்டிற்கான பாதீட்டுத் திட்டம் சமர்ப்பிக்கப்படமாட்டாது

### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

அடுத்த ஆண்டிற்கான பாதீட்டுத் திட்டம் பாராளுமன்றில் முன்வைக்கப்படமாட்டாது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பாதீட்டுத் திட்டத்திற்குப் பதிலாக இடைக்கால ஒதுக்கீட்டுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்படும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார். (நி-6)

## நுகர்வோர் அதிகாரசபைக்கான ஆட்சேர்ப்பு விரைவில்

(கொழும்பு)

நுகர்வோர் அதிகார சபையில் விசாரணை அதிகாரிகளுக்காக ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நுகர்வோர் அதிகார சபையில் நாடு முழுவதும் 277 பேர் மாத்திரமே காணப்படுவதாகவும்,

அத்தொகை போதுமானது அல்ல என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எரிபொருள் உட்பட பொருட்களின் விலை குறைவடைந்து காணப்படுவதுடன் அதன் பலன் நுகர்வோருக்குக் கிடைக்காமையை சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் சுமித் உடுக்கும்புர, வாய்மொழி மூலமாகக் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

நுகர்வோர் சட்டம் 20 வருடங்களாக திருத்தப்படவில்லை என்றும்,தற்போது காணப்படும் சட்டத்தை மாற்றி அமைத்து அமைச்சரவை அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு சட்டமா அதிபருக்கு தற்போது அனுப்பப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெளிவுபடுத்தினார். (நி-6)

# இலங்கையில் நீதி, பொறுப்புக் கூறலுக்கான அமெரிக்காவின் ஒத்துழைப்பு தொடரும்

## சர்வதேச குற்றவியல் நீதிக்கான அமெரிக்க சிறப்புத் தூதுவர்



**(வோஷிங்டன்)**

**இலங்கையில் நீதி மற்றும் பொறுப்புக் கூறலுக்கான முக்கியமான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதை மையப்படுத்தி தொடர்ந்தும் பணியாற்ற எதிர்பார்ப்பதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் சர்வதேச குற்றவியல் நீதிக்கான சிறப்புத் தூதுவர் பெத்வான் ஷாக் தெரிவித்துள்ளார்.**

வோஷிங்டனில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கை சந்தித்த வேளையிலேயே அவர் இந்தக் கருத்தினை தெரிவித்துள்ளார். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் வருடாந்த தலைமை இராஜதந்திரிகளின் அமர்வில் பங்கேற்றிருந்தார்.

இதில் பங்கேற்பதற்காகச் சென்றிருந்த ஜூலி சங் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் சர்வதேச குற்றவியல் நீதிக்கான சிறப்புத் தூதுவர் பெத்வான் ஷாக்குடன் உரையாடல்களில் ஈடுபட்டிருந்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் வெளிப்படுத்தியுள்ள அவர், இலங்கையில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான முக்கியமான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துவதை மையப்படுத்தி தொடர்ந்தும் பணியாற்ற எதிர்பார்த்துள்ளேன்.

தூதுவர் ஜூலி சங்குடனான சந்திப்பு அருமையாக இருந்தது - நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான முயற்சிகளைத் தொடர்வதற்கு அமெரிக்க தூதுவருடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளேன் எனத் தெரிவித்தார். (நி-6)

# கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா -2024



**கம்பன் புகழ் விருது-2024**
சரஸ்வதி சம்மான் விருதாளர்
எழுத்தாளர் சிவசங்கரி
(தமிழ்நாடு)

கொழும்புக் கம்பன் கழகத்தின் இவ்வாண்டுக் கம்பன்விழா எதிர்வரும் ஜூன் மாதம் 14, 15, 16, 17 ஆம் திகதிகளில் கொழும்பு வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கம்பன் விழாவின் முதல்நாளான ஜூன் மாதம் 14 ஆம் திகதி மாலை 5 மணிக்கு இராமகிருஷ்ண தோட்டம், இல. 11 இல் அமைந்துள்ள ஸ்ரீ ஐஸ்வர்ய லஷ்மி கோயிலிலிருந்து கம்பன் திருவுருவப்படமும் சீதா இராம விக்கிரகங்களும் இலங்கையின் பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்களின் மங்கல இசையுடனும், கல்லூரி மாணவர்களின் கீழைத்தேய, மேலைத்தேய வாத்திய இசையுடனும், மங்கையர்களின் நிறைகுட பவனியுடனும், ஊர்வலமாக விழாமண்டபம் நோக்கி எடுத்து வரப்படவுள்ளன. ஊர்வலத்தைத் தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்க, மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் நீதியரசரும் கொழும்புக் கம்பன்கழகப் பெருந்தலைவருமான ஜெ. விஸ்வநாதன் தலைமையுரையையும் கொழும்புக் கம்பன் கழகத் தலைவர் ஈ. கணேஷ் தொடக்க உரையையும் ஆற்றவுள்ளனர். இவ்வாண்டுக் கம்பன் விழா திருநாள் மங்கலத்தில், கம்பராமாயணச் செய்யுட்களின் முழுத்தொகுப்பு நூல் வெளியிடப்படவுள்ளது. இந்நூலின் முதற் பிரதியை இலக்கியப்புரவலர் ஹாசிம் உமர் அவர்கள் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

கம்பன் விழா முதல் நாளில் வழங்கவென அறக்கட்டளை விருதுகளைச் சிலர் ஏற்படுத்தியுள்ளனர். அவ்வாறு நிறுவப்பெற்றுள்ள 'நாவலர் விருது' இவ்வாண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற பதிப்பாளர் சிவாலயம் மோகனுக்கும் 'விபுலாநந்தர் விருது' புகழ்பெற்ற இசைப்பேரறிஞர் சங்கீத பூஷணம் பொன். ஸ்ரீவாமதேவனுக்கும் 'மகரந்தச்சிறகு' விருது இலங்கையின் சிறந்த படைப்பாளிகளில் ஒருவரான கவிஞர் மேமன் கவிக்கும் 'ஏற்றமிகு இளைஞர்' விருது, கிரிக்கட் விளையாட்டு வீரர் வி.வியாஸ்காந்திற்கும் வழங்கப்படவுள்ளன, சிறந்த ஆய்வு நூல் ஒன்றுக்கான 'நுழைபுலம் ஆய்வு' விருது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா எழுதிய "யாழ்ப்பாணத்து கல்வி வளர்ச்சியில் இந்திய அறிஞர்களின் பங்களிப்பு" எனும் நூலுக்கு வழங்கப்படவுள்ளது.

அகில இலங்கைக் கம்பன் கழகம் உலகளாவித் தமிழ்ப்பணி செய்த சான்றோர் ஒருவருக்கு "கம்பன் புகழ் விருதினை" ஆண்டு தோறும் கொழும்புக் கம்பன் விழாவில் வழங்கி வருகிறது. "வி.ரி.வி. பவுண்டேஷன்" நிறுவியுள்ள வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை நினைவு அறக்கட்டளை வழங்கும் இக் 'கம்பன் புகழ் விருது', இவ்வாண்டு, புகழ்பெற்ற தமிழக எழுத்தாளர் சிவசங்கரிக்கு வழங்கப்படவுள்ளது. தம் செயற்பாடுகளால் நம் நாட்டுக்குப் பெருமை சேர்த்த பெருமக்கள் அறுவரை ஆண்டுதோறும் அகில இலங்கைக் கம்பன் கழகம் கௌரவித்து வருகிறது. அவ்வரிசையில் இவ்வாண்டு இலங்கையின் முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் சண்முகம் ஸ்ரீதரன், தமிழ் அறிஞர் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், வடமாகாண பிரதம செயலாளர் லட்சுமணன் இளங்கோவன், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான விருது வழங்கல் நிறைவு நாளான 17ஆம் திகதி மாலை இடம்பெறவுள்ளது.

இயல்த்துறையில் ஈடுபடும் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் கம்பன் கழகம் நடத்தி வரும் அமரர் துரை. விஸ்வநாதன் நினைவுப் பேச்சுப் போட்டி, அமரர் பொன். பாலசுந்தரம் நினைவுக் கவிதைப் போட்டி, நாவலர் நற்பணிமன்ற அனுசரணையில் நடத்தப்படும் திருக்குறள் மனனப்போட்டி, இலக்கியப்புரவலர் ஹாசிம் உமர் அவர்களின் அனுசரணையில் நடத்தப்படும் இஸ்லாமிய இலக்கியப் பேச்சுப் போட்டி முதலியவற்றில் வெற்றி பெற்ற போட்டியாளருக்கான பரிசில் வழங்கும் நிகழ்ச்சி விழாவின் மூன்றாம் நாள் மாலை நிகழ்வில் நடைபெறவுள்ளது.

இவ்வாண்டுக் கம்பன் விழாவில் தனியுரை, விவாத அரங்கம், பட்டி மண்டபம், சிந்தனை அரங்கு, கவியரங்கம், கருத்தரங்கம், நாடக அரங்கம், வழக்காடு மன்றம், நாட்டிய அரங்கு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இவ்வாண்டு விழா நிகழ்ச்சிகளிற் கலந்துகொள்ள, மலேசிய நாட்டு இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை முன்னாள் பிரதியமைச்சரான டத்தோ ஸ்ரீ எம். சரவணன், புதுச்சேரி முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் வி.பி.சிவக்கொழுந்து, தமிழ்நாட்டின் தலைசிறந்த அறிஞர்கள் மற்றும் பேச்சாளர்களான சீர்வளர்சீர் நாரயண ஞானதேசிக சுவாமிகள், முனைவர் பாரதி கிருஷ்ணகுமார், திருமதி பாரதி பாஸ்கர், கவிச்சுடர் கவிதைப்பித்தன், இலக்கியச் சுடர் த. இராமலிங்கம், முனைவர் இரா. மாது, வழக்கறிஞர், கே. சுமதி, பேராசிரியை பர்வீன் சுல்தானா ஆகியோர் வருகை தருகிறார்கள். இவர்களோடு சென்னைக் கம்பன் கழகம், புதுவைக் கம்பன் கழகம், கோவில்பட்டிக் கம்பன் கழகம், டில்லிக் கம்பன் கழகம், திருச்சிக் கம்பன் கழகம், உயர் வள்ளுவ அமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## விருதாளர்கள்



'நாவலர் விருது'
சிவாலயம் ஜெ. மோகன் (தமிழ்நாடு)



'விபுலானந்தர் விருது'
சங்கீதபூஷணம் பொன். ஸ்ரீவாமதேவன்



'நுழைபுலம்' ஆய்வு விருது
பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா



'மகரந்தச் சிறகு' விருது
கவிஞர் மேமன் கவி



'ஏற்றமிகு இளைஞர்' விருது
கிரிக்கட் வீரர் வி.வியாஸ்காந்த்

## கௌரவம் பெறும் சான்றோர்



டாக்டர் சண்முகம் ஸ்ரீதரன்
(எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்)



திரு. மஹிந்த தேசப்பிரிய
(முன்னாள் தலைவர், இலங்கை தேர்தல் ஆணையம்)



கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
(தமிழறிஞர்)



கௌரவ. ரவூப் ஹக்கீம் பா.உ.
(தலைவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்)



திரு. லட்சுமணன் இளங்கோவன்
(பிரதம செயலாளர், வடமாகாணம்)



கௌரவ. செந்தில் தொண்டமான்
(ஆளுநர், கிழக்கு மாகாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறையால்
# சத்திரசிகிச்சைகள் பாதிப்பு
## சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளில் சுமார் இரண்டாயிரம் விசேட வைத்தியர்களின் பற்றாக்குறை நிலவுவதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

விசேட வைத்தியர்களின் கடுமையான பற்றாக்குறையால் பல வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சை உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுகாதார சேவைக்காக அங்கீகரிக்கப்பட்ட விசேட வைத்தியர்களின் எண்ணிக்கை நான்காயிரம் எனவும் தற்போது 2150 விசேட வைத்தியர்கள் மாத்திரமே இருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான வைத்தியர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளமையினால் இந்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்குச் செல்லும் விசேட வைத்தியர்கள் நாடு திரும்பமாட்டார்கள் எனவும் அவர்களை நாட்டில் தக்கவைப்பதற்கான முறையான வேலைத் திட்டம் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-6)

# எனது 33 வருட ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...!



வழக்காளி
சோழியூரான் (சந்ததிப் பூசகர்)

இறை நீதிமன்றம்
நீதியரசர்
பறாளாய் ஈசுர விநாயகர்

எதிராளி
சிறீலங்கா அரசு

ஈசுர விநாயகனிடம் மனுத்தாக்கல் செய்தமை (08.11.1991) அம்மனுவில் அன்றைய பிரதான கோரிக்கை, கொழும்பு அரசியலில் சூறாவளி ஏற்பட்டு பூகம்பமாக வெடிக்க வேண்டும்.

**என் அன்பு உள்ளங்களே !**

இலங்கைத் திருநாடு தற்போதைய பொருளாதார அரசியல், சமூக நெருக்கடியிலிருந்து விடுபட்டு தன்னைத் தற்காத்துக் கொண்டு ஒரு தேசமாக எழுந்து நிற்க வேண்டுமானால் அது புத்திஜீவிகள் கல்விமான்களால் மட்டுமே இயலும்

எனவே தான் வலம்புரிப் பத்திரிகையில் (09.08.2022) ஐயா கூறியவாறு ஈசுர விநாயகரின் சூத்திரத்தில் விஷேடமாக இலங்கை தனது பழைய சிங்கள அரசியல் கலாசாரத்தை மீள பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இன்றைய நிலைக்குத் தேவையாக உள்ளது. பழமை வாய்ந்த ஐ.தே.கட்சி ஶ்ரீலங்கா சு.க.கட்சி போன்ற கட்சிகளை ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு அவை இன்றைய நிலையில் டிஜிட்டல் அரசியல் கலாசாரமாக மாற்றம் பெறவேண்டுமென்றே கூறப்பட்டுள்ளது. 11.11.2019 வெளிவந்த பிரசுரம் மூலம் அனைத்து மக்களுக்கும் அழைப்பு விட்டிருந்தேன்.

பௌத்த குருமார்களே! சிங்கள புத்தி ஜீவிகளே! தொடர்ந்து நீங்கள் இலங்கை அரசியல் விடயங்களை அரசியல்வாதிகளின் பொறுப்பாகக் கருதி அவர்களிடம் ஒப்படைத்து அமைதி காக்க வேண்டாம். இனியும் நீங்கள் அமைதி காப்பது நாட்டுக்கே ஆபத்து. காலத்திற்கேற்ப நாட்டிற்குப் பொருத்தமான டிஜிட்டல் அரசியல் கலாசாரத்தை கண்டுபிடியுங்கள். உருவாக்குங்கள். இதன் மூலம் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் நம் நாட்டுப் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்க முடியும். இந் நாட்டின் வருங்கால சந்ததியினரைக் கருத்தில் கொண்டு அவர்களின் வளமான வாழ்வுக்கு தாய் நாட்டிற்கு பாரிய பணிகளை நிறைவேற்ற வாருங்கள். வாருங்கள் தாமதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென மீண்டும் பகிரங்க அழைப்பு விட்டிருந்தேன். இவ் அழைப்பை எவரும் கவனத்தில் எடுக்கவில்லை. இது காரணமாக "சிஸ்ரம் சேஞ்" என்ற அடிப்படையில் அரகலய போராட்டம் ஆரம்பித்தது. இந்த சிஸ்ரம் சேஞ் என்ற எண்ணக்கருவின் உற்பத்தி சமாதான அரணின் மூலம் ஈசுர விநாயகரினாலே 11.11.2019 விஷேட செய்தியாக கூறியருளப்பட்டது. எனவே இதன் காரணகர்த்தா வேறுயாருமில்லை. ஈசுர விநாயகரே தான். போராட்டம் வெற்றி பெற்றது. ஆனால் அவர்களது நோக்கம் நிறைவேறவில்லை. பிழையான நோக்கங்கள் நிறைவேற காரணம் தெய்வம் ஒரு போதும் விடப்போவதில்லை. பின்னர் ஊழல்வாதிகள், மோசடிக்காரர்கள், சந்தர்ப்பவாத அரசியல் திருடர்கள் சர்வ தேசத்தை ஏமாற்றும் அரசியல் நடிகர்கள் யாவரும் கூட்டுச் சேர்ந்து மக்கள் ஆணை பெறாத அரசியல் நாடகத்தை அரங்கேற்றியதுடன் விமர்சையாகவும் நடத்தி வருகின்றனர், என்ற எதிர்க்கட்சியினரின் எதிர்ப்புக் கோஷங்கள் மத்தில் இனிமேல் தான் ஈசுர விநாயகரின் திருவிளையாடல்கள்.. பொறுத்திருந்து யாவற்றையும் பார்ப்போம்..

எதிர்கால வளமான சந்ததியினருக்கான டிஜிட்டல் அரசியல் கலாசாரம் பொதுக்கட்சி ஆட்சிமுறை ஆகும். பொதுக்கட்சி ஆட்சிமுறையை எடுத்துக்கொண்டால் சிங்கள மக்களுக்கென்றோ தமிழ் மக்களுக்கென்றோ முஸ்லீம் மக்களுக்கென்றோ, மலையக மக்களுக்கென்றோ அரசியல் கட்சிகள் எதுவுமில்லை. அனைத்து அரசியல்வாதிகளும் டிஜிட்டல் அரசியல் ஆட்சிமுறையில் நாட்டு நலன், மக்கள் நலன் கருதி ஒரு பொதுக்கட்சியிலேயே பாராளுமன்றம் பயணிக்க வேண்டும். சமத்துவம், சகோதரத்துவம், மத நல்லிணக்கம் தேசிய ஒற்றுமை போன்ற, இன்று நாட்டிற்கு தேவையான இந்த நற்பண்புகள் இவ்வாட்சி மூலம் நிச்சயமாகக் கட்டியெழுப்ப முடியும்.

இலங்கைத் திருநாட்டில் பலகட்சி ஆட்சிமுறையைக் கைவிட்டு ஒரு டிஜிட்டல் பொதுக்கட்சி ஆட்சிமுறையைக் கொண்டுவந்து சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணுங்கள் என்று 11.11.2019 ஈசுர விநாயகர் கூறியருளிவிட்டார்.

ஈசுர விநாயகரின் அருளாட்சியிலே இவ்வாறாக எழுதப்பட்ட சமாதான அரணின் ஐயாவின் எண்ணக்கருவை அரசியல் வாதிகள் கவனத்தில் எடுக்காமையினாலேயே தெய்வதண்டனைக்கு ஆளாகிவிட்டார்கள். இது காரணமாக நாட்டின் இன்றைய நிலையை நோக்கும் போது இன்று மக்கள் மத்தியில் எல்லாக் கட்சிகளும் தோல்வியடைந்த கட்சிகளே! மேலும் சர்வ வல்லமை பொருந்திய ஈசுர விநாயகர் தற்போது சிங்கள், தமிழ், முஸ்லீம் மலையகக் கட்சிகளை ஒவ்வொன்றாக உடைத்து அவை நீதிமன்றம் வரை சென்றிருப்பதையும் உணர்வோமாக,

**என் இனிய நெஞ்சங்களே !**

மனிதன் தெய்வ தண்டனைமூலம் தான் இறைவனைக் காண்கிறான். அதாவது தெய்வம் தண்டனை மூலம் தன்னைக் காட்டியருளி மனிதனை உணரவைக்கின்றது. ஈசுர விநாயகரும் தனது வாக்குகளையெல்லாம் நடைமுறையில் நிரூபித்து தண்டனை மூலம் தன்னைக் காட்டி, நான்தான் நாட்டுப்பிரச்சினைக்குரியவர் என்பதை உணர்த்திக்கொண்டிருக்கின்றார். இதில் சந்திரிக்கா அம்மையாரும் தப்ப முடியவில்லை. அம்மையாருக்கு நடந்தது என்ன? அதாவது தேர்தலை ஒத்திவைத்துவிட்டு சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும் படி இறைநீதிமன்றத்திலிருந்து கட்டளையை ஈசுர விநாயகர் பிறப்பித்தார். அதன்படி அடியேனும் (09.11.1999) அக்கட்டளையை பக்ஸ் மூலம் அறிவித்திருந்தேன். பக்ஸ் செய்தி....

"Medam, Chandrika Bandaranaike,
President.
Republic of Sri Lanka.
Postpone Presidential Election to protect the country and people and initiate peace talks. This is divine order of Paralai Eswara vinayagar."

அம்மையாரோ இக் கட்டளைக்கு செவிசாய்க்காது அவமதித்தது மட்டுமல்ல இறை நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டுக்கு ஆளாகி தனது கண்ணைப் பறிகொடுத்திருந்தார்.

அன்று தனது ஆலயத்தை இடிக்கும்படி கட்டளையிட்ட போத்துக்கேய தளபதியின் கண்ணைக் காகமாக வந்து கொத்தியவர். இன்று யுத்தத்தைப் பிரகடனப்படுத்திய முப்படைத் தளபதியாகிய அம்மையாரின் கண்ணையும் விட்டுவைக்கவில்லை. பின்னர் அம்மையார் கடவுள்தான் என்னைக் காப்பாற்றினார் என்றும் நான் மறுபிறப்பு எடுத்து வந்துள்ளேன் என்றும் ஈசுர விநாயகனின் தெய்வீகத்தை உணர்ந்து புலம்புகின்றார்

**இனிமேல் என்ன நடக்கப்போகின்றது?**

❖நாடு பறிபோகுமாப்போல் ஒரு நிலை உருவாகும்.
❖இது எவ்விதம் இன்னும் ஈசுர விநாயகரின் நிறைவேறாத தர்சனங்களை நோக்குமிடத்து, இலங்கையில் இதுவரை நடைபெறாத பெரும் அரசியல் சண்டை ஏற்படுதல் (அதாவது அரசியல் கட்சிகளிடையே மோதல்)
❖பின்னர் இனக்கலவரமாக மாறுதல்
❖ஜனாதிபதி அவர்கள் இந்தியாவில் உதவி கோருதல்.
❖இந்திய அறிவாளிக்குழு உடனடியாக இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பிவைக்குமாறு மத்திய அரசுக்கு சிபார்சு
❖புற்றினுள் இருந்து ஈ வருவது போன்று இந்திய இராணுவ விமானங்கள் தொடர் தொடராக கொழும்பை நோக்கி விரைந்து வருதல்
❖பாதுகாப்பு உயர் வலயங்களை இந்திய இராணுவம் கைப்பற்றல்
❖இலங்கை இராணுவம் தமிழர்களுக்கு விற்பனை நிலையங்களை அமைத்து எவ்விதம் பொருட்களை விநியோகித்ததோ அவ்விதமே இந்திய இராணுவமும் விற்பனை செய்தல்.
❖தென்னிலங்கையில் இந்தியாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக எதிர்ப்பியக்கம் உருவாதல்.
❖வந்த இராணுவம் திரும்பிப் போக மறுத்தல்
❖இந்திய இராணுவத்தின் வருகையால் சிங்கள மக்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாதல்.

இக்காலகட்டத்திலே தான் ஈசுர விநாயகர் அனைத்து மக்களுக்கும் தனது திருவிளையாடல்களைக் காட்டியருளப்போகின்றார். நீங்கள் எல்லோரும் உணரத்தான் போகின்றீர்கள்.

"பார் தெரியுது பறாளாயான் பதி பக்தர் குறை தீர்க்கும் பறாளாயான் சந்திதி" சர்வ வல்லமை பொருந்திய ஈசுரவிநாயகனை வணங்குங்கள். சதா நினையுங்கள் அவர் திருப்பாதம் போற்றி! போற்றி! போற்றி!

**சோழியூரான் பிறைசூடிக்குரு**
(1153) **(ஆன்மீகவாதியும், சந்ததிப் பூசகரும், பரம்பரைப் பரிபாலகரும்)**

10.06.2024

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் வான் தாக்குதலில் 210 பேர் உயிரிழப்பு

## பணயக் கைதிகள் 4 பேர் மீட்பு



(காசா)

பாலஸ்தீனத்தின் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர்.

இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியானார்கள். மேலும் 250 இற்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்களை பிணைக்கைதிகளாக ஹமாஸ் அமைப்பினர் பிடித்துச் சென்றனர்.

இதையடுத்து காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் காசாவில் 36 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். சில மாதங்களுக்கு முன்பு ஏற்பட்ட போர் நிறுத்தத்தின் போது 100 இற்கும் மேற்பட்ட பிணைக் கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் விடுவித்தனர்.

இன்னும் அவர்களிடம் 120 பிணைக்கைதிகள் உள்ளனர். அவர்களை மீட்க இஸ்ரேல் இராணுவம் நடவடிக்கை எடுத்து வருகிறது.


இந்த நிலையில் ஹமாஸ் அமைப்பினரால் கடத்திச் செல்லப்பட்ட பிணைக்கைதிகளில் ஒரு பெண் உட்பட 4 பேரை இஸ்ரேல் இராணுவம் அதிரடியாக நேற்று முன்தினம் மீட்டது.

காசா முனையில் உள்ள நுசைரத் முகாமில் கடத்தி வைக்கப்பட்டிருந்த பணயக் கைதிகளை இஸ்ரேல் சிறப்புப்படையினர் மீட்டனர்.

இந்த மீட்பு நடவடிக்கையின் போது இஸ்ரேலிய சிறப்புப்படை வீரர் ஒருவர் உயிரிழந்தார். (நி-6)

# அமெரிக்காவில் ஆபத்தான பறக்கும் விஷ சிலந்திகள்

## அச்சத்தில் மக்கள்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில், 4 அங்குல நீளமான கால்கள் கொண்ட பெரிய விஷ சிலந்திகளின் பரவலால் அச்சம் ஏற்பட்டுள்ளது.

இது மற்ற சிலந்திகளைப் போல் அல்லாமல் இந்த சிலந்திகள் பறக்கும் திறன் கொண்டவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த சிலந்திகள் உற்பத்தி செய்யும் பட்டு நூல்களை காற்றில் வீசுவதன் மூலம் பறக்கும் திறனைப் பெற்றுள்ளன.

ஜோரோ என்று அழைக்கப்படும் இந்த சிலந்திகள் பிரகாசமான மஞ்சள் மற்றும் சாம்பல் நிறத்தில் இருக்கும்.

கடந்த ஒக்டோபரில் ஆக்கிரமிப்பு இன நிபுணர் டேவிட் கோய்ல் வெளியிட்ட ஆய்வில், சிலந்திகள் ஆசியாவைச் சேர்ந்தவை என்று கூறப்பட்டுள்ளது.

இந்த சிலந்திகள் 2010 இல் வடக்கு ஜோர்ஜியாவில் பதிவாகியுள்ளன, மேலும் இந்த சிலந்திகள் 2022 முதல் நியூயோர்க் நகரில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

புளோரிடா, அலபாமா, மிசிசிப்பி, கரோலினாஸ், டென்னசி, கென்டக்கி, வர்ஜீனியா, மேற்கு வர்ஜீனியா, மேரிலாந்து மற்றும் ஓஹியோ உள்ளிட்ட கிழக்கு அமெரிக்காவின் பல பகுதிகளில் ஜோரோ சிலந்திகளைப் பார்த்ததாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த சிலந்திகள் மற்ற சிலந்திகளுக்கு விரோதமான சூழலில் கூட உயிர்வாழ முடியும் என்று டேவிட் கோய்ல் குறிப்பிடுகிறார். (நி-6)

# சுவிட்சர்லாந்தில் புதிய கொவிட் மாறுபாடு


(ஜெனீவா)

சுவிட்சர்லாந்தில் KP.2 என்ற புதிய கொவிட் மாறுபாடு தோன்றியுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது. குறிப்பாக கோடை மாதங்கள் முழுவதும் இந்த கொவிட் மாறுபாடு தங்கியிருக்கலாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கொவிட் மாறுபாடு வேகமாக பரவிவருவதாகவும் அதனால், மக்கள் அச்சமடைய தேவையில்லை எனவும் அந்நாட்டு அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

புதிய கொவிட் மாறுபாடு அதன் தீவிர போக்கை இன்னும் வெளிப்படுத்தவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# 389 பயணிகளுடன் புறப்பட்ட விமானம் தீப்பிடித்து எரிந்ததால் பரபரப்பு



(ஒட்டாவா)

கனடாவின் டொராண்டோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பிரான்ஸ் தலைநகர் பாரிசுக்கு 389 பயணிகள் 13 பணியாளர்களுடன் ஏர் கனடா விமானம் புறப்பட்டது.

விமானம் பறக்கத் தொடங்கிய சில வினாடிகளில் அதில் உள்ள என்ஜின் வெடித்துச் சிதறியது. என்ஜின் பகுதியில் தீ பிடித்து எரிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரிகள், விமானிக்கு தகவல் தெரிவித்து உடனே விமானத்தை தரை இறக்குமாறு அறிவுறுத்தினர்.

விமானிகள் உடனடியாக விமானத்தை பத்திரமாகத் திருப்பி விமான நிலையத்தில் தரையிறக்கினர்.

அங்கு தயாராக இருந்த தீயணைப்பு வீரர்கள் மற்றும் மீட்புக் குழுவினர் என்ஜின் பகுதியில் ஏற்பட்ட தீயை அணைத்தனர். விமானிகள் சாமர்த்தியமாக செயற்பட்டு விமானத்தை உடனே தரை இறக்கியதால் பயணிகள் தப்பினர்.

இந்த சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. விமானத்தில் தீ பிடித்ததாக தகவல் தெரிந்ததும் பயணிகள் பதற்றம் அடைந்தனர். பின்னர் அசம்பாவிதம் ஏற்படாமல் விமானம் தரை இறக்கப்பட்டதால் நிம்மதி அடைந்தனர்.

விமானம் புறப்பட்டதும் அடிப்பகுதியில் தீப்பிடித்து எரியும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன. (நி-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# குழந்தைகளை பாதுகாக்க தவறிய குற்றவாளிகள் பட்டியலில் இஸ்ரேல்!

## இணைத்தது ஐ.நா சபை

**(ஜெனீவா) குழந்தைகளுக்கு எதிரான சட்டங்களை மீறும் படைகளின் பட்டியலில் இஸ்ரேல் இராணுவத்தையும் ஐக்கிய நாடுகள் சபை சேர்த்துள்ளது.**



அதன்படி, கடந்த ஆண்டு குழந்தைகளை பாதுகாக்கத் தவறிய குற்றவாளிகள் பட்டியலில் இஸ்ரேல் இராணுவமும் இடம் பெற்றுள்ளதாக தமக்குத் தகவல் கிடைத்ததாக ஐக்கிய நாடுகள் சபைக்கான இஸ்ரேல் தூதுவர் கிலாட் எர்டன் அறிவித்துள்ளார்.

இந்த பட்டியல் அடுத்த வாரம் ஐ.நா பாதுகாப்பு சபையில் சமர்ப்பிக்கப்படும்.

மோதல்களில் குழந்தைகள் கொல்லப்படுவது, உதவி கிடைக்காதது, பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகளை குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

காசா பகுதியில் ஹமாஸ்க்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு மனி ஸ்ரீதாபிமான உதவி தேவைப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# உக்ரைனை வெற்றி கொள்ள அணுவாயுதம் தேவையில்லை

## இறுமாப்புக் கொள்ளும் புடின்



(மொஸ்கோ)

உக்ரைனில் வெற்றியைப் பெறுவதற்கு அணு ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் ஐரோப்பாவில் அணு ஆயுதப் போர்கள் எதுவும் வெடிக்கவில்லை.

ரஷ்ய - உக்ரைன் போர் அணுவாயுதப் போராக மாறாது என்பதற்கான கிரெம்ளினின் சமிக்ஞையாக புடினின் இந்த அறிவிப்பு இருக்கலாம் என சர்வதேச அரசியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்கத்தேய நாடுகள் மற்றும் அமெரிக்காவின் வலுவான தலையீடுகள் உக்ரைனில் அதிகரித்தால் மாத்திரமே ரஷ்யா அணுவாயுதம் பற்றி சிந்திக்கும் என்பது இவர்களது கருத்தாக உள்ளது. 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் புடின் உக்ரைனுக்குள் துருப்புக்களை அனுப்பியதில் இருந்து ரஷ்யா, தன்னைத் தற்காத்துக் கொள்ள தேவைப்பட்டால் அணுவாயுதங்களை பயன்படுத்தும் என்று பல சந்தர்ப்பங்களில் கூறியிருக்கிறார்.

செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சர்வதேச பொருளாதார மன்றத்தின் அமர்வில் உரையாற்றிய ரஷ்யாவின் ஆய்வாளரான செர்ஜி கரகானோவ், உக்ரைன் மீது மேற்கத்தேய நாடுகள் ஆதிக்கம் செலுத்தாதவரை ரஷ்யா அணுவாயுதப் பயன்பாடு குறித்து சிந்திக்காதிருக்கும்.

"ரஷ்யாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் அணுவாயுதத்தை பயன்படுத்த முடியும். அப்படியொரு நிலைமை வந்ததாக நான் நினைக்கவில்லை. அத்தகைய தேவை இல்லை" என்றும் புடின் தெரிவித்தார்.

2014 இல் உக்ரைனிடம் இருந்து கைப்பற்றிய கிரிமியாவை மொஸ்கோ அதன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. மேலும் நான்கு உக்ரைனியப் பகுதிகளை இப்போது ரஷ்யாவின் ஒருங்கிணைந்த சொந்தப் பகுதிகளாகக் கருதுகிறது.

கீவ் அவற்றை மீட்டெடுக்க மேற்கத்தேய நாடுகளுடன் கைகோர்த்துச் செயற்பட்டால் அணுசக்தித் தாக்குதலுக்கான சாத்தியம் இருக்கும் என எதிர்வுக் கூறல்கள் உள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (நி-6)

# தாக்குதலுக்குள்ளான டென்மார்க் பிரதமர்



(டென்மார்க்)

கோபென்ஹேகன் சென்றிருந்த டென்மார்க் பிரதமர் மேட் ஃப்ரெடெரிக்சன் மர்ம நபரொருவரால் தாக்குதலுக்குள்ளாகியுள்ள சம்பவம் அந்நாட்டில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தாக்குதலுக்குள்ளான டென்மார்க் பிரதமர் மேட் ஃப்ரெடெரிக்சன் உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

இதில் பிரதமரின் கழுத்துப் பகுதியில் சிறு காயம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், பிரதமரை தாக்கியதாகக் கூறப்படும் 39 வயதுடைய மர்ம நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன்போது, தாக்குதல் குறித்து கருத்து தெரிவித்துள்ள பிரதமர் மேட் ஃப்ரெடெரிக்சன் நடந்த சம்பவத்தால் தான் அதிர்ச்சியும், கவலையும் அடைந்ததாக தெரிவித்துள்ளார்.

மேலும், தான் தற்போது நலமாக இருப்பதாகவும், தனக்காக குரல் கொடுத்தவர்களுக்கும் ஊக்கமளித்தவர்களுக்கும் நன்றி என குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு டென்மார்கின் இளம் வயது பிரதமராக மேட் ஃப்ரெடெரிக்சன் பதவியேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைகள் திருட்டு பெண்ணொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். கன்னாதிட்டி காளிகோயில் கும்பாபிஷேகத்திற்கு வந்த அடியார்களின் தாலிக் கொடி மற்றும் நகைகளை திருடிய பெண்ணொருவர் நேற்று கைது செய்யப் பட்டார்.

வவுனியா பூந்தோட்டத்தில் வசிக்கும் கொழும்பு வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த 27 வயதான பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான பெண்ணை யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரித்த பொழுது திருடப்பட்ட தாலிக் கொடி மற்றும் நகைகள் மீட்கப்பட்டது.

குறித்த பெண் மேலதிக விசாரணைக் காக யாழ். பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவி னரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. (நி-6-33)

# மருத்துவமனைக்குள் புகுந்து தாதியர், காவலாளி மீது தாக்குதல்

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார மருத்துவ மனைக்குள் புகுந்து தாதியர் மீதும் காவ லாளி மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை யில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு கட்டடத்தில் விடுதி இலக்கம் ஏழில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவரை யாழ். போதனா மருத்துவ மனைக்கு மாற்ற வில்லை எனத் தெரி வித்து சிலர் விடுதிக்குள் புகுந்து தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் தாதியர் ஒருவர் மீதும் காவலாளி ஒருவர் மீதும் தாக்குதல் நடத்தி விட்டு தப்பித்து சென்றுள்ளனர். சம்பவம் தொடர் பில் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர். (நி-6-60)


## பகிரங்க ஏல அறிவித்தல்
### கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2024.07.01- 2024.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏலம் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக நடைபெறும்.

**பகிரங்க ஏலம் நடைபெறும் திகதி, நேரம்** :- 2024.06.25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணி

**பகிரங்க ஏலம் நடைபெறும் இடம்**:- கரைச்சி பிரதேச சபை, தலைமை அலுவலகம், கிளிநொச்சி.

**பகிரங்க ஏலம் விடப்படும் குத்தகை நிலையங்கள்**

| இல | குத்தகை நிலையம் | பகிரங்க ஏல இழிவுத்தொகை 01.07.2024-31.12.2024 |
|---|---|---|
| 1 | கிளிநொச்சி சேவைச்சந்தை பொதுமலசலகூடம் | 19,500.00 |
| 2 | பரந்தன் சந்தியில் இருந்து இரணைமடுச் சந்தி வரையான A9 வீதி வாகன தரிப்பிடம் | 42,000.00 |
| 3 | பரந்தன் பொது மலசலகூடம் | 12,000.00 |
| 4 | D10உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 134,000.00 |
| 5 | கல்லாறு சந்தை தொகுதி | 6,000.00 |
| 6 | புன்னைநீராவி மாட்டிறைச்சிக்கடை | 72,900.00 |

**நிபந்தனைகள்**

1. பகிரங்க ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் 2024.06.25 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் ரூபா.500.00 செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற முடியும்.
2. சித்தியடையும் ஏலகாரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை அன்றைய தினமே உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
3. 2023.11.19 ஆம் திகதி வலம்புரி பத்திரிகையில் வெளியிடப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளும் கருத்திற்கொள்ளப்படும்.

**செ.செல்வகுமார்,**
**செயலாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.** (சி-564) 10.06.2024



## வெளிவந்து விட்டது:

கலாநிதி.பா.தனபாலன்
திருமதி.கர்ணி.தனபாலனின்

### நவீன முன்பள்ளிக் கல்வியில் ஆசிரியரும் பெற்றோரும்

- ஒவ்வொரு முன்பள்ளி ஆசிரியரும் பெற்றோரும் படிக்க வேண்டிய நூல்.
- சமகால முன்பள்ளி அபிவிருத்திகள்.
- இலங்கையின் முன்பள்ளி தேசிய தராதரங்கள்.
- புதிய முன்பள்ளி கலைத்திட்ட-வகுப்பறை பிரயோகங்கள், திட்டமிடல்கள்.
- தேசிய கல்வி நிறுவகம், திறந்த பல்கலைக்கழகம், பல்கலைக்கழகங்களின் முன்பள்ளி டிப்ளோமா, ஆரம்பக்கல்வி (Bed) MEd கற்கைகளுக்கு உகந்த நூல்...

முன்பள்ளி முகாமைத்துவக் குழுக்கள் நூலை வாங்கி முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இலவசமாக வழங்கவும்



முன்பள்ளிக் கல்வியில் அதிசிறந்த விளையாட்டு மூலம் கற்பதற்கான விசேட விளையாட்டுக்கள் பல அறிமுகப்படுத்தப்படுகின்றன...

கிடைக்குமிடங்கள் * திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகம் – 077 068 1958
* குமரன் புத்தக இல்லம் கொழும்பு – 06 011 236 4550

(1163)


# இராசிபலன்

**10.06.2024**
**வைகாசி 28 திங்கட்கிழமை**
**சதுர்த்தி பிற்பகல் 6.05 மணி வரை**
**பூசம் முன்னிரவு 11 .41 மணி வரை**

**சுபநேரம் 11.52 - 1.22 மணிவரை**
**இராகுகாலம் 7.22 -8.52மணிவரை**
**சதுர்த்தி விரதம்**

**சந்திராஷ்டமம்.**
**அனுசம், கேட்டை.**

**வளவன்**



சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தனை ஆற்றலால் சிறப்ப டைவீர்கள்.



வழிபாட்டால் ஆனந் தம் காண வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, எப்படி நடக்கும் என்று நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும்.



குடும்பத்தினரின் ஒத்து ழைப்பினால் தொழில் முன்னேற்றம் காணும் நாள், முத்தான வாய்ப் புகள் இல்லம் தேடி வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டு வீர்கள்.



நினைத்த காரியம் கைகூடும், நண்பர்க ளால் வளர்ச்சி கூடும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் நாள்,தொழிலை விரிவு படுத்தும் எண்ணம் மேலோங்கும்.



தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற் சிகள் வெற்றி தரும், சுப காரியப் பேச்சுக்க ளில் தாராளம் காட்டுவீர்கள், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும்.



பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், தடைப்பட்ட காரியங் களில் முன்னேற்றம் காண்பீர்கள், ரோக பயமுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மை உண்டு.



கடன் பிரச்சினைக ளைச் சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், செய் தொழில் மேன்மை யுண்டு, பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்



உன்னதமான வாழ் விற்கு அடித்தளம் அமைக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.



வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செல்வ நிலை உயரும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.



கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், குடும்பப் பெரிய வர்கள் உங்களின் செயற்பாடு களில் குறை கூறலாம்.



தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்தி கள் வந்து சேரும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும், பிள்ளை களின் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

எந்த வேலையும் இழிவு அல்ல, இழிவு என்பது சோம்பல்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அனர்த்தத்தை ஏற்படுத்தும்

# மரங்களை அகற்றுவது தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்) மாவட்ட அனர்த்த அபாயத்ததை ஏற்படுத்தக் கூடிய மரங்கள் மற்றும் மரக் கிளைகளை அகற்றுதல் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் கடந்த வியாழக் கிழமை யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த மாவட்ட பதில் அரசாங்க அதிபர் பாதுகாப்பு அமைச்சின் உடைய அனர்த்த முகாமைத்துவ பிரிவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக தென்மேல் பருவப் பெயர்ச்சி காலநிலை தாக்கத்தை எதிர்கொள்வதற்கான முன்னாயத்த நடவடிக்கையாக கிடைக்கப் பெற்ற சுற்றுநிருபத்தின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தினுடைய 15 பிரதேசசெயலாளர் பிரிவிலும் முழுமையாக அகற்றப்பட வேண்டிய மரங்கள்,பகுதியளவில் கிளைகள் அகற்றப்பட வேண்டிய மரங்களின் தகவல்களை பிரதேச ரீதியாக பெற்றுக் கொண்ட தன் அடிப்படையில் 63 கிராம சேவையாளர்கள் பிரிவிலும் 60 மரங்கள் முழுமையாக அகற்றப்பட வேண்டிய தேவை இருப்பதாகவும் 85 மரங்கள் பகுதியளவில் கிளைகள் அகற்றப்பட வேண்டியிருப்பதாகவும் பிரதேச செயலாளர்கள் தெரிவித்தனர்.

மேலும் பிரதேச செயலாளர்களை தலைமையாக கொண்ட அந்த குழுவினருக்கு மரங்களின் கிளைகளை அகற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதோடு முழு மையாக அகற்ற வேண்டிய மரங்களை பிரதேச செயலாளர்கள் நேரில் சென்று பார்வையிட்டு அந்த மரங்கள் உண்மையாக அழிக்கப்பட வேண்டியதேவை உள்ளதா? என்பதை உறுதிப்படுத்திய பின் அந்த மரங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறும் நீண் டகால பழமை வாய்ந்த முக்கியத்துவம் மிக்க மரங்களை அகற்ற வேண்டிய தேவைகள் இருப்பதாயின் அவை மாவட்ட குழுவினருக்கு சமர்ப்பிக்கப்பட்டு மாவட்ட குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்திருந்தார். இக் கலந்து ரையாடலில் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர். ரி.என். சூரியராஜா, பிரதேச செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். (நி-6)


## கேள்வி அறிவித்தல்
## சாவகச்சேரி பிரதேச சபை
## சபைநிதி வேலைத்திட்டங்கள்-2024

1. சாவகச்சேரி பிரதேச சபை சார்பாக உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. ஒப்பந்ததாரர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) வீதி /கட்டடம் நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule -5) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. கேள்விகள் சமர்ப்பிக்கும் போது பெறுமதிசேர் வரி (VAT) வலுவிலுள்ள சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் உள்ளடங்கிய கேள்விதாரருக்கு மாத்திரமே வரிக் கொடுப்பனவை கோர முடியும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர் சாவகச்சேரி பிரதேச சபை, A9 வீதி கொடிகாமம் (தொலைபேசி : 021-205 0348, 021 205 0356 தொலைநகல் : 021-205 0348) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2024.06.10 தொடக்கம் 2024.06.24 வரையான காலப்பகுதியில் வேலை நாட்களில் காலை 09:00 மணி முதல் 15:00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தலைவர், பெறுகை குழு, சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியில் 2024.06.10 ஆம் திகதியிலிருந்து 2024.06.24 ஆம் திகதி வரை காலை 09:00 மணிக்கும் மாலை 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா.2,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனியாக உறைகளிட்டு தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம் எனும் முகவரிக்கு 2024.06.25 ஆம் திகதி மாலை 02:00 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகள் அனைத்தும் அன்றையதினமே (2024.06.25) மாலை 2.30 மணிக்கு திறக்கப்படும். இதன்போது கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி (ஒருவர் மாத்திரம்) மாத்திரம் கலந்துகொள்ளமுடியும்.
9. கீழ் காட்டப்படும் கேள்விகள், கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து NP/14/41/(6)/2/C.F/2024/26-37 இலக்க வேலைக்கு 77 நாட்கள் (2024.09.10) மற்றைய வேலைகளுக்கு 63 நாட்கள் (2024.08.21) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
11. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2024.06.18 ஆம் திகதி மாலை 15:00 மணிக்கு பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக் கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

| தொடர் இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) ரூ.மில்லியன் | ஒப்பந்த காலம் நாட்கள் | வேண்டப் படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லு படியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | NP/14/41/(6)/2/C.F/2024/22, 23, 24, 25 | மருதங்குளம் வீதி நிர்மாணம் மட்டுவில் நுணாவில்<br>குச்சுப்பிட்டி இந்து மயான வீதி புனரமைப்பு கைதடி நுணாவில்<br>அப்பகொட்டில் வீதி 2ம் குறுக்குத்தெரு வீதி புனரமைப்பு இராமாவில்<br>தெய்வங்கேணி வீதி புனரமைபபு சரசாலை வடக்கு | 4.69 | 90 | C8 & C7 (வீதி நிர்மாணம்) | 47,000.00 | 2024.09.24 |
| 2 | NP/14/41/(6)/2/C.F/2024/26, 27, 28, 29 | கடற்கரை வீரபத்திரர் கோவில் வீதி புனரமைப்பு<br>கிராமசபை வீதி 15வது வீதி புனரமைப்பு (வெள்ளாம்போக்கட்டி GTMS வீதி)<br>செல்லப்பா வீதி புனரமைப்பு<br>பூதவிநாயகர் கோவில் வீதி புனரமைப்பு | 7.42 | 90 | C7 & C6 (வீதி நிர்மாணம்) | 75,000.00 | 2024.10.08 |
| 3 | NP/14/41/(6)/2/C.F/2024/30, 31, 32, 33 | புங்கடி பிள்ளையார் வீதி புனரமைப்பு<br>கச்சாய் ஊரெல்லை வீதி புனரமைப்பு<br>சந்தை பின் வீதி 2ம் தெரு புனரமைப்பு<br>அறுகம்புலம் வீதி 2ம் தெரு புனரமைப்பு | 7.16 | 90 | C7 & C6 (வீதி நிர்மாணம்) | 72,000.00 | 2024.10.08 |
| 4 | NP/14/41/(6)/2/C.F/2024/34, 35, 36, 37 | டச்சு வீதி புனரமைப்பு வரணி<br>பொற்பத்தை இந்து மயான வீதி புனரமைத்தல் வரணி<br>கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை (மூத்தவிநாயகர் கோவில் வீதி) புனரமைத்தல் வரணி<br>வாரித்தம்பி வீதி புனரமைத்தல் வரணி | 5.58 | 90 | C7 & C6 (வீதி நிர்மாணம்) | 56,000.00 | 2024.10.08 |
| 5 | NP/14/41(6)/2/C.F/2024/38 | கொற்றங்குடை வீதியும் ஊத்தல் வீதியும் புனரமைப்பு கைதடி கிழக்கு | 2.32 | 90 | C8 & C7 (வீதி நிர்மாணம்) | 24,000.00 | 2024.09.24 |

விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக்கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை ( VAT மற்றும் வேறுவரிகள்) 50 மில்லியனுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(III) மற்றும் பின்னூட்டல் இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும்.

2024.06.10 க.சந்திரகுமார் தலைவர், உள்ளூராட்சி [illegible]


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 400 | 500 | 400-600 | 600 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 280 | 100-170 | 200 |
| தக்காளி | 350 | 300 | 430 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 150 | 140 | 100-130 | 200 |
| கோவா | 350 | 260 | 300 | 200 | 400 |
| கரட் | 300 | 460 | 450 | 250 | 500 |
| பூசணி | 120 | 160 | 130 | 100 | 140 |
| புடோல் | 200 | 200 | 150 | 130 | 300 |
| வாழைக்காய் | 120 | 140 | 100 | 80-100 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 250 | 300-550 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 260 | 250 | 250 | 250 |
| பாகற்காய் | 800 | 1000 | 1200 | 600 | 1000 |
| வெண்டக்காய் | 200 | 300 | 200 | 250 | 320 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 120 | 80 | 200 |
| பயற்றங்காய் | 450 | 600 | 350 | 250-400 | 450 |
| லீக்ஸ் | 350 | 650 | 650 | 400 | 800 |
| பீற்றூட் | 550 | 550 | 600 | 300 | 600 |
| கறிமிளகாய் | 550 | 500 | 600 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 450 | 250-450 | 800 |
| போஞ்சி | 600 | 550 | 1000 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 350 | 350 | -- | 550 |
| கீரை - 1 பிடி | 140 | 120 | 120 | 100 | 200 |
| தேசிக்காய் | 800 | 1000 | 1000 | 1000 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 80-100 | 60-110 | 80-120 |
| இராசவள்ளி | 450 | 450 | 500 | -- | 450 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 600 | -- | 700 |
| முள்ளங்கி | 200 | 200 | 250 | 80 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 160 | 120 | 100 | 260 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர்

503





சுழிக்காற்றில் அது பியத்து எறியப்பட்டிருக்கலாம் அல்லவா?

கப்பலண்டை போய்த் தகவல் தெரிந்து கொண்டு வருவதற்காகப் பழுவேட்டரையர் அங்கிருந்து ஒரு படகை அனுப்பி வைத்தார். கப்பலிலிருந்தவர்கள் படகுக்காகக் காத்திருந்ததாகத் தோன்றியது. உடனே இருவர் கப்பலிலிருந்து படகில் இறங்கினார்கள். அவர்களில் ஒருவன் பார்த்திபேந்திர பல்லவன்.

வந்தியத்தேவனைக் காப்பாற்றுவதற்காக மரக்கலத்திலிருந்து படகில் இறங்கிச் சென்ற இளவரசர் அருள்மொழிவர்மர் திரும்பக் கப்பலுக்கு வரவேயில்லை அல்லவா? இதனால் பார்த்திபேந்திரன் எல்லையற்ற கவலைக்கு உள்ளாகித் தத்தளித்தான். காற்று அடங்கிப் பொழுது விடிந்தபிறகு அங்குமிங்கும் கப்பலைச் செலுத்தித் தேடினான். படகில் இளவரசருடன் இறங்கியவர்களில் ஒருவன் மட்டும் குற்றுயிராக அகப்பட்டான். அவன் வந்தியத்தேவனை இளவரசர் மிக்க தீரத்துடன் காப்பாற்றிய பிறகு படகுக்கு நேர்ந்த கதியைச் சொன்னான். இதனால் பார்த்திபேந்திரனுடைய துயரம் பன்மடங்கு ஆயிற்று. ஒருவேளை கோடிக்கரை சென்று உயிருடன் ஒதுங்கியிருக்கக் கூடாதா என்ற ஆசை ஒரு பக்கத்தில் கிடந்து அடித்துக்கொண்டது.

ஆகவே கோடிக்கரை சென்று விசாரிப்பதென்று தீர்மானித்தான். அதற்காகவே கப்பலை அங்கே கொண்டுவந்து நிறுத்தச் செய்தான். படகில் இறங்கிய பிறகு கரையை நோக்கிப் போக ஆரம்பித்ததும் பெரிய பழுவேட்டரையர் தம் இளையராணி சகிதமாக அங்கு வந்திருப்பதை அறிந்து கொண்டான். இது அவனுக்கு மிக்க எரிச்சலை மூட்டியது.

பழுவூர் இளையராணி நந்தினியைப்பற்றி ஆதித்தகரிகாலர் கூறியவையும் நினைவுக்கு வந்தன. அவ்விதம் அந்த மகாவீரரின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு அவரைப் பித்துப் பிடிக்க அடித்த மோகனாங்கி எப்படியிருப்பாள் என்று பார்க்கும் சபலமும் அவன் உள்ளத்தின் அடிவாரத்தில் ஒரு மூலையில் எழுந்தது. அந்த விருப்பம் விரைவில் வளர்ந்து கொழுந்துவிடத் தொடங்கியது. ஒருவேளை அவளைப் பார்க்க முடியாமற் போய் விடுமோ என்ற கவலையும் உண்டாகிவிட்டது.

ஆனால் அந்தக் கவலை நீடித்திருக்கவில்லை. படகிலிருந்து கரையில் இறங்கியதும் நேரே பழுவேட்டரையரின் கூடாரத்துக்குப் பார்த்திபேந்திரனை அழைத்துப் போனார்கள். கூடாரத்தின் வாசலில் பழுவேட்டரையர் கம்பீரமான தோற்றத்துடன் நின்று கொண்டிருந்தார். ஆஜானுபாகுவான அந்த வீராதி வீரரைக் 'கிழவர்' என்று சொல்லுவது எவ்வளவு பெரிய தவறு என்று பார்த்திபேந்திரன் எண்ணினான். அவன் பார்த்திருக்கும் எத்தனையோ இளம் பிராய வாலிபர்களைக் காட்டிலும் அவர் தேகக்கட்டும், மனோதிடமும் வாய்ந்த புருஷசிங்கமாகக் காட்சி அளித்தார்.

இவ்விதம் அவன் எண்ணிக் கொண்டிருக்கும் போதே கூடாரத்துக்கு உள்ளேயிருந்து மங்கை ஒருத்தி வெளிவந்தாள். மேகங்களுக்குப் பின்னாலிருந்து மின்னல் தோன்றுவதுபோல அந்தப் பொன் வண்ணப் பூவை கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் திகழ்ந்தாள். நெடிது வளர்ந்து உரம்பெற்ற தேக்கு மரத்தின் பேரில் படர்ந்திருக்கும் அழகிய பூங்கொடியைப் போல் அவள் பழுவேட்டரையருக்கு முன்னால் வந்து நின்றாள். அந்தப் புவன மோகினியைக் கண்டு திகைத்து நின்ற பார்த்திபேந்திரன் பேரில் தனது வேல் விழிகளைச் செலுத்திய வண்ணமாக அவள், "நாதா! இந்த வீர புருஷர் யார்? இவரை நான் இதுவரையில் பார்த்ததில்லையே?" என்று சொன்னாள். பொற் கிண்ணத்திலிருந்து அருந்திய மதுபானத்தைப் போல் அவளுடைய கிளி மொழிகள் பார்த்திபேந்திரனைப் போதை கொள்ளச் செய்தன.

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்


### கஞ்சப்பிரபு

பட்டினப்பாக்கத்தில் ஜம்பு என்ற செல்வந்தர் இருந்தார். அவரிடம் ஏராளமான செல்வம் இருந்தது. இருப்பினும் சரியான கஞ்சன்.

எங்குச் சென்றாலம் அவர் நான்கு குதிரைகள் பூட்டப் பட்ட அழகான வண்டியில் அமர்ந்து செல்வார்.

ஒரு முறை, வெளியூர் சென்றிருந்த அவர் தன் ஊர் திரும்பிக் கொண்டிருந்தார். வண்டிச் சக்கரத்தில் ஏதோ முறிவது போன்ற ஓசை கேட்டது.

கோபத்துடன் அவர் வண்டியோட்டியைப் பார்த்து, "டேய் வண்டியை நிறுத்து. சக்கரத்திற்கு என்ன ஆயிற்று பார்?" என்று கத்தினார்.



நடுக்கத்துடன் கீழே இறங்கிய வண்டியோட்டி சக்கரத்தைப் பார்த்தான். "ஐயா! சக்கரத்தில் உள்ள கடையாணி உடைந்துவிட்டது. அந்த ஆணியைச் சரி செய்[illegible] தான் வண்டியை [illegible] முடியும்," என்றான்.

முட்டாளே! புறப்படும்போதே இதைப் பார்த்திருக்க வேண்டாமா? பக்கத்தில் உள்ள ஊருக்கு வண்[illegible]டம் காட்டி வண்டியைச் சரி செய். நேரத்தை வீணாக்காதே, என்று வண்டியில் இருந்தபடியே கத்தினார் ஜம்பு.

குதிரைகளுடன் வண்டியை மெதுவாக இழுத்துச் சென்றான் அவன். சிறிது நேரத்தில் வண்டி கொல்லனின் உலைக் களத்தின் முன் நின்றது.

அவன் குரல் கொடுக்க வெளியே வந்த கொல்லன் வண்டியைப் பார்த்தான். கேசவனை பார்த்தக் கொல்லன், "உடைந்திருக்கும் கடையாணிக்குப் பதில் வேறொரு ஆணியை மாட்டினால் வண்டி பழைய படி ஓடும். ஒரு வெள்ளிப் பணம் கூலி ஆகும், என்றான்.

"என்ன ஒரு ஆணியை மாட்டக் கூலி ஒரு வெள்ளிப் பணமா? நீ கொல்லனா அல்லது கொள்ளைக்காரனா?" என்று கோபத்துடன் கேட்டார் ஜம்பு.

"எனக்கு நிறைய வேலை இருக்கிறது. நான் கேட்ட கூலி தருவதாக இருந்தால் சொல்லுங்கள். வண்டியைச் செப்பனிட்டுத் தருகிறேன். இல்லையேல் வேறு ஆளைப் பாருங்கள்," என்றான் அவன்.

வேறு வழியில்லாத ஜம்பு, "சரி" என்றார்.

சிறிது இரும்புத்துண்டு ஒன்றை எடுத்தான் அவன். உலைக் களத்து நெருப்பில் அதைப் போட்டான். பழுக்கக் காய்ந்த அந்த இரும்புத் துண்டை கத்தியால் நன்கு அடித்தான். ஆணியாக மாறிய அதை சக்கரத்தில் மாட்டினான். "இனிமேல் வண்டி நன்றாக ஓடும். கூலியைத் தாருங்கள்," என்றான் அவன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகர் தங்கள் காலத்தில் பெரும் பாகத்தைப் பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர். – லா புரூயர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் பேரவையில் இருந்து கற்றுக் கொள்ளுங்கள்

தமிழ் மக்கள் பேரவை ஜோதியாய் எழுந்த போது அதன் ஒளி பலருக்குப் பயத்தையும் ஏக்கத்தையும் கொடுத்தது. எப்படியும் அந்த ஜோதியை நீறாக்கிவிட வேண்டுமென்பதற்காக அப்போது ஊடகங்களில் பக்கம் பக்கமாக எழுதப்பட்டது.

அதிலும் தென்பகுதியில் இருந்து மிக நீண்ட காலமாக வெளிவரும் தமிழ்ப் பத்திரிகை ஒன்று தனது ஞாயிறு வார இதழில் தமிழ் மக்கள் பேரவைக்கு எதிராக நான்கு பக்கங்களில் கட்டுரை வரைந்திருந்தது.

இதைவிட, பேரவையை உருவாக்குவதில் பாடுபட்டவர்கள் மீது சேறு வாரி இறைப்பதற்கு சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்திய வர்களின் நீண்டதொரு பட்டியல் இன்னமும் உண்டு. இதில் வேதனை என்னவென்றால், பேரவையை விமர்சிப்பதில் முழுநேரமாக ஈடுபட்டவர்கள் இப்போது எங்குற்றனர் என்பது தெரியாமல் இருப்பதுதான்.

பரவாயில்லை. ஆலயத்தில் தேவாரம் பாடுவதற்கு தன்னை அனுமதிக்கவில்லை என்பதற்காக, அந்த ஆலயத்துக்கு அருகில் இன்னொரு ஆலயம் அமைத்து ஆன்மீகத்தையே உடைப்புச் செய்த எங்கள் பலாப்பழுப் பண்பாடு அரசியலில் இல்லாமல் போகுமா என்ன? நடக்கட்டும். இப்போது புற்றீசல் போல புதுப்புதுத் தமிழ் அமைப்புகள் உருவாகின்றன.

இந்த அமைப்புகளின் ஆயுள்காலம் மிகவும் சொற்பம் என்பது தெரிந்த விடயம்.

அதிலும் இவ்வாறு உருவாகின்ற அமைப்புகள் தொடர்பில், தமிழ் மக்கள் திரும்பியும் பார்ப்பதில்லை என்பதுதான் வெளிப்படையான உண்மை.

ஆக, உலகில் இருக்கக்கூடிய அதி உயர் சபைகளின் பெயர்களையெல்லாம் தமிழர் அமைப்புகளாக ஆரம்பித்துவிட்டோம்.

இனி எஞ்சியிருக்கக்கூடியது பாதுகாப்புச் சபை மட்டுமே. அதுவும் நான்கு பேர் சேர்ந்து விட்டால், உருவாகிவிடும்.

ஏதோ தமிழர் ஐக்கிய நாடுகள் சபை என்று பெயர் வைக்காமல் விட்டுவைத்தால் அது போதும் என்பதுடன் இவை ஒருபுறமிருக்க,

2019ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலின்போது பொது வேட்பாளர் ஒருவரை தமிழ் மக்கள் சார்பில் நிறுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை தமிழ் மக்கள் பேரவை எடுத்ததென்றும் அது தொடர்பில் பேரவையால் நியமிக்கப்பட்ட உபகுழு தனது அறிக்கையில் தெரியப்படுத்தியிருந்தது என்றும் அரசியல் கட்டுரை ஒன்றில் கண்ணுற்றோம். உண்மை. எந்த மறுப்பும் இல்லை.

ஆனால் 2019இல் தமிழ் மக்கள் பேரவை எடுத்த முடிவை முழுமையாக தீர்த்துக்கட்டும் நோக்கில் அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திக்கருகாமையில் உள்ள விடுதியொன்றில் அவசர அவசரமாக விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது.

இதன் பின்னணியில் புலம்பெயர் தமிழ் அமைப்பு செயலாற்றியது.

இதில் வேடிக்கை என்னவெனில், தமிழ் மக்கள் பேரவையால் நியமிக்கப்பட்ட குறித்த உபகுழுவில் இருந்த முக்கியஸ்தர்கள் மாணவர் ஒன்றியம் கூட்டிய கூட்டத்திலும் பங்கு பற்றியிருந்தனர்.

இருந்தும் ஜனாதிபதித் தேர்தலில் (2019) தமிழ்த் தரப்பு சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என தமிழ் மக்கள் பேரவை எடுத்த தீர்மானம் பற்றி அந்தக் கூட்டத்தில் அவர்கள் பேசவே இல்லை. ஈற்றில் பேரவை எடுத்த முடிவு முறியடிக்கப்பட்டது.

இதுதான் நிலைமை என்பதால், பேரவைக்கு ஏற்பட்ட அவலத்திலிருந்து கற்றுக்கொள்ளுங்கள். எப்படிக் கழுத்தறுப்பு நடக்குமென்று.

# தமிழ் மக்களின் உரிமையை தாங்கள் பெற்றுத் தருவீர்கள்

## பிரதமர் மோடிக்கு விக்னேஸ்வரன் வாழ்த்து

(கொழும்பு)

இந்தியாவின் பிரதமராக மூன்றாவது தடவையாக நேற்று பதவியேற்ற நரேந்திர மோடி அவருடைய ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களுக்கு கூட்டாட்சியின் கீழ் வடக்கு, கிழக்கில் அதிகாரப்பகிர்வை உறுதிப்படுத்துவார் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் செயலாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள நரேந்திர மோடிக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துக் கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சமீபத்திய தேர்தலில் உலகின் மிகப் பெரிய ஜனநாயகத்தில் உங்கள் தலைமையிலான பா.ஜ.க. மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றியைப் பார்ப்பது உண்மையில் எங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான தருணமாகும். தொடர்ந்து, மூன்றாவது முறையாக நீங்கள் நாட்டை வழிநடத்தவுள்ளீர்கள்.

உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்கள் சார்பாகவும், இலங்கை தமிழர்கள் சார்பாகவும், உங்களது நல்லாட்சிக்கு வாக்களித்து, வரலாற்று ரீதியான பதிவைச் செய்த இந்திய மக்களுக்கும், எங்கள் மகிழ்ச்சியையும் அன்பையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவை பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் உலக வல்லரசாக மாற்றுவதற்கான கருவியாக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

நீங்கள் இலங்கைத் தமிழர்களின் நண்பர். நான் வட மாகாணத்தில் முதலமைச்சராக இருந்த போது இந்தியாவிலிருந்து எமது மண்ணுக்கு விஜயம் செய்த முதலாவது அரச தலைவராக தாங்களே உள்ளீர்கள். அப்போது, குஜராத்தில் நான் சந்தித்த குஜராத்தின் சாதாரண மக்கள், நீங்கள் குஜராத்தின் முதலமைச்சராக இருந்த உங்களின் பதவிக்காலத்தை பெருமிதத்துடன் எப்படி நினைவுகூர்ந்தார்கள் என்பதை உங்களிடத்தில் குறிப்பிட்டேன்.

இலங்கைத்தமிழர்களுக்கு ஐக்கிய இலங்கைக்குள் சமத்துவம், நீதி, பாதுகாப்பு மற்றும் இறையாண்மையை இந்தியா உறுதி செய்யும் என்றும், அந்த இலக்குகளை அடைவதற்கு இடைவிடாது உழைக்கும் என்றும் தாங்கள் மீண்டும் மீண்டும் கூறிவருகின்றீர்கள்.

அந்த ஆறுதல் வார்த்தைகளை இலங்கைத்தமிழர்கள் இன்னும் எதிர்பார்ப்புகளுடன் நினைவுகூருகிறார்கள். மூன்றாவது தடவையாக உங்களது பதவிக்காலத்தில், உங்களது ஆறுதல் வார்த்தைகளுக்கு வடிவம் கொடுப்பீர்கள் என்றும், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குக்கான உண்மையான அரசியல் அதிகாரப்பகிர்வை கூட்டாட்சிஆட்சியின் கீழ் உறுதிப்படுத்துவீர்கள் என்றும் நம்புவோம். கடவுள் எப்பொழுதும் உன்னதத்துடன் இருக்கட்டும் என்றுள்ளது. (ந-7,10)

## ஸ்ரீ சொர்ணசித்தி விநாயகர் வருடாந்த மகோற்சவம் இன்று

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு சொர்ணவடலி ஸ்ரீ சொர்ணசித்தி விநாயகர் ஆலய வருடாந்த திவ்விய மகோற்சவப் பெருவிழா இன்று காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு இரதோற்சவப் பெருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவப் பெருவிழாவும் நடைபெறவுள்ளது. (ந-7,10)

## சீரற்ற காலநிலையால் அதிகரிக்கிறது டெங்கு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தற்போது நாளாந்தம் சுமார் 100 டெங்கு நோயாளர்கள் பதிவாகுவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

2024 ல் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 25 ஆயிரத்து 619 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய மேல் மாகாணத்தில் மாத்திரம் 9 ஆயிரத்து 348 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணம் மாத்திரமின்றி வடமேல், தென், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் டெங்கு நோய் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டுமென தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத்சமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (ந-7,10)

## பேருந்து விபத்து 13 மாணவர்கள் காயம்

வரக்காபொல பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று கால்வாய்க்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்த 13 பாடசாலை மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் சிகிச்சைக்காக வரகாபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 26 மாணவிகள் மற்றும் 07 பெற்றோர்கள் ரெண்டம்பேவில் உள்ள முகாமுக்குச் சென்று கொண்டிருந்த போது கட்டுப்பாட்டை இழந்த பேருந்து வரக்காபொல நகரில் உள்ள கால்வாயில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வரக்காபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,10)

## போதைப்பொருள் வில்லைகளுடன் உகண்டாப் பிரஜை கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கொக்கெய்ன் ரகப் போதைப்பொருளுடன் உகண்டா பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபர் 31 வயதுடையவர் எனவும் அவர் கொக்கெய்ன் ரக போதைப்பொருளை விழுங்கிய பின்னர் கட்டாரில் இருந்து இலங்கைக்கு வந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் 14 கொக்கெய்ன் மாத்திரைகள் வெளியே எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,10)

## சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை

### மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பிரதேசத்தில் அண்மைக் காலமாக சட்டவிரோதமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

வவுணதீவு பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு மற்றும் பொலிஸ் விஷேட புலனாய்வு பிரிவின் இரகசிய தகவலுக்கமைவாக இந்த கசிப்பு உற்பத்தி நிலையம் நேற்று முற்றுகையிடப்பட்டது.

இதன்போது சந்தேகத்தின் பேரில் 22 வயதுடைய அதே பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ந-7,10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
# ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி – பகுதி V

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

10

அசோசியேட்டட் நியூஸ்பேப்பர் நிறுவனம் யூலை 1973 இலும், ரைம்ஸ் நிறுவனம் ஓகஸ்ட் 1977 இலும் இலங்கை அரசாங்கத்தால் தேசியமயமாக்கப்பட்டன.

பின்னர் ரைம்ஸ் நிறுவனம் நிதி மற்றும் தொழிலாளர் பிரச்சினைகளை எதிர்கொண்டதை அடுத்து, 1985 ஜனவரி 31 அன்று இப்பத்திரிகையும் அதன் பல்வேறு வெளியீடுகளும் மூடப்பட்டன.

தேசியமயமாக்கலுக்கு முன் அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தின் தலைவர் ரஞ்சித் விஜேவர்தன, ரைம்ஸ் வெளியீடுகளின் வர்த்தகப் பெயர்களையும், நூலகத்தையும் வாங்கினார். விஜேவர்தனாவின் நிறுவனமான விஜயா நியூஸ்பேப்பர்ஸ், முன்னாள் ரைம்ஸ் வெளியீடுகளின் பெயர்களைப் பயன்படுத்தி பல்வேறு செய்தித்தாள்களைத் தொடங்கியது.

## 1848 ஆம் ஆண்டுக் கலகமும் அதன் பின் விளைவுகளும்

1817-18 ஆம் ஆண்டுப் பெருங் கலகத்தின் பின் இலங்கையில் நிலவிய அமைதியைக் குலைத்த அடுத்த முக்கிய நிகழ்ச்சி 1848 ஆம் ஆண்டுக் கலகமாகும். அவ்வாண்டு ஏற்பட்ட குழப்பங்கள் ஈரிடங்களில்-ஒன்று கொழும்பிலும், மற்றையது கண்டிப் பிரதேசத்தின் மாத்தளை குருநாகல் என்னும் இடங்களிலும் நடந்தேறின. இக்கலகம் மாத்தளைக் கலகம் அல்லது கண்டிக் கலகம் என்றும் அழைக்கப்படும்.

1848 இல் விதிக்கப்பட்ட வரிகளுக்கு விரோதமாக உருவாகிய பொது எதிர்ப்பு ஒன்றுதான் இவ்வீரிடங்களிலும் எழுந்த கலகங்களிற் காணப்பட்ட பொது •இயல்பாகும். கண்டி மாநிலங்களில் கலகத்தை ஊக்குவித்த பிரதான சக்தி நாட்டின உணர்ச்சியாகும்.

### கலகத்தின் காரணங்கள்

1. நாட்டின வாதம்

கண்டியின் பழமை வயலிலே, பிரித்தானியர் புதுமை விதைகளை விதைத்த பொழுது, பழமைக்கும் புதுமைக்கும் இடையில் ஏற்பட்ட தகராறுகளினின்றும் வேறுபாடுகளினின்றும் 1848 ஆம் ஆண்டுக் கலகம் விளைந்தது. ஒருபுறம் 1815 இல் சிறீ விக்கிரம இராஜசிங்கன் தோற்கடிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டதையும் அதனைத் தொடர்ந்து சிங்களவர் ஆட்சி போய், பிரித்தானியர் ஆட்சி தோன்றியதையும், 1818 ஆம் ஆண்டுக் கலகம் வெற்றி நிலையில் நின்று தோல்வியாக மறைந்தமையையும் ஒன்றன்பின் ஒன்றாகக் கண்ட பிரதானிகளும் மக்களும் பழமையை மீண்டும் நிலைநாட்ட மனம் ஏங்கி நின்றனர்.

மறுபுறம் ஆங்கிலேயர் 1818 தொடக்கம் புது நிர்வாக ஒழுங்குகள், சீர்திருத்தங்கள், நீதிபரிபாலன முறைகள், தெருக்கள், தோட்டங்கள், புது வரிமுறைகள் என்பனவற்றின் வழியாக கண்டி இராச்சியத்தின் தனித்தன்மையைச் சிதைக்கவும் அப்பிரதேசத்தைச் சுரண்டவும் முற்பட்டனர்.

மானிய முறையினையும் இடைக் காலத்தின் பழைய முறைகளையும் அனுசரித்து வந்த சிங்களச் சமுதாயத்தினுள் இராணுவப் பலமும் நிர்வாகத்திறனும் முற்போக்குக் கருத்துக்களும் கொண்ட நவீன பிரித்தானிய அரசாட்சி புகுந்தமை, வெண்கலக் கடையினுள் யானை புகுந்தது போலாயிற்று.

பிரதான காரணம் நாட்டின வாதமாகும். இச்சக்தியை ரொறிங்ரன் நன்கு விளங்கி, அதனைப் பின்வருமாறு வருணித்தார். (கண்டியரின்) நாட்டினவாதம் என்பது 34 ஆண்டுகளுக்கு முன்னர் முதன் முறையாக எங்கள் ஆணைக்குக் கீழ்ப்படுத்தப்பட்ட மக்களிடையே காணப்படும் உணர்ச்சிகள், பழக்கங்கள், உறவுகள், வழக்கங்கள் என்பனவற்றைக் குறிக்கும்.

அவர்கள் கரையோர மாகாணங்களுடன் தாங்கள் இணைக்கப்பட்டமை ஒருவிதமான முன்னேற்றத்தையும் ஏற்படுத்தியதாகத் தென்படவில்லை. என்று உணர்ந்தனர். கண்டியரின் நாட்டினவாதமானது நீண்ட காலச் சரித்திர வளர்ச்சியினுள் ஏற்பட்ட வழமையைத் தழுவுந் தன்மையைக் கொண்டதாயிற்று. தத்தம் கிராமங்களுக்கும் மாவட்டங்களுக்கும் நாட்டுக்கும் அவர்கள் நிறைந்த விசுவாசமும் அபிமானமும் கொண்டவர்களாய் இருந்தனர்.

இப்பாமர மக்கள் தம்முள் ஒருவனை அரசனாக்கி பழைய கண்டி அரசாட்சி முறைக்கும் அதன் நிலையான பாரம்பரிய ஒழுங்கு முறைக்கும் திரும்பிச் செல்ல எண்ணினர்.

பிரித்தானியர் ஆட்சியினால் ஏற்பட்ட மாற்றங்களுக்கும், நிலைபேறின்மைக்கும், எதிராக அவர்கள் நன்கு அறிந்ததும் அவர்கள் உள்ளங்களில் உறுதியாக வேரூன்றி இருந்ததுமான பழைய சமுதாய முறையை உயிர்ப்பிக்கும் நோக்கமாகவே கலகத்தை விளைவித்தனர்.

2. பிரதானிகளின் அதிருப்தி

பிரித்தானியர் 1818 ஆம் ஆண்டுக் கலகத்தை அடக்கியபின் கண்டிப் பிரதேசங்களின் பரிபாலன ஒழுங்குகளில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தினர், புது உடன்படிக்கையின் விதிகளினால் கண்டிப் பிரதானிகள் பல வழிகளிலும் ஒடுக்கப்பட்டனர்.

கண்டி நாட்டில் மீண்டும் புரட்சி நிகழாதிருக்க, பிரதானிகளின் செல்வாக்கையும் அதிகாரங்களையும் குறைப்பது இன்றியமையாததென அரசாங்கமும் திட்டமிட்டுக் கருமமாற்றியது. இறைவரி சேகரித்தல், நீதி பரிபாலனம் என்னும் கருமங்களுக்கு ஆங்கிலேய உத்தியோகத்தர் பொறுப்பேற்றதுடன் பிரதானிகள் கீழ்நிலை உத்தியோகத்தில் மாத்திரமே நியமிக்கப்பட்டனர்.

ஒரு காலத்தில் தம் பிரதேசங்களில் குறுநில மன்னர்களைப் போன்று அரசாட்சி நடாத்தி வந்த பிரதானிகள், சடுதியாக அரசாங்கப் பரிபாலனங்களில் நின்று முழுமையாக விலக்கப்பட்டதுடன் நெடுங்காலமாக அனுபவித்து வந்த அதிகாரங்கள், வருவாய்கள் யாவற்றையும் இழந்தனர்.

தம்முன்னைய அதிகாரங்களையும் சலுகைகளையும் இழந்தபோதிலும் அவர்கள் பாமர மக்களின் மேல் கொண்டிருந்த செல்வாக்கினை அத்துணை இலகுவாக இழந்து விடவில்லை. இச்செல்வாக்கு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் குடியியற் சேவையாளர் மக்களுடன் நெருங்கிப் பழகாத பட்சத்தில் "மக்களுக்கும் அரசாங்கக் குடியியற் சேவையாளருக்குமிடையே தொடர்புகளை ஏற்படுத்த வல்லதாக இருந்த ஒரே ஒரு சாதனம் பிரதானிகள் தான்" என ரெனன்ற் கூறியுள்ளார்.

பிரதானிகளின் செல்வாக்கினைப் பற்றி ஸ்க்கினர் கூறியதாவது "பழமை வாய்ந்த மாசுபடாத புனித வம்சங்களில் உதித்த பிரதானிகளுக்கு எல்லா வகுப்பு மக்களும் காட்டும் மரியாதை தெய்வ வணக்கத்திற்குச் சமமானது". இத் துணை செல்வாக்குடைய பிரதானிகளை அரசாங்கம் நிர்வாகக் கருமங்களினின்று அறவே புறக்கணித்தமை, ஈற்றில் அவர்களுக்கே பெருந் தீவினையாக அமைந்தது. இந்தநிலையில் பல துறைகளிலும் அதிருப்தி அடைந்த பிரதானிகள், தம் மேல் சந்தேகமும் ஐயமும் கொண்ட ஆட்சியாளருக்கு எவ்வித உதவியும் நல்காது நாட்டில் வளர்ந்து வந்த அதிருப்தியை பாராமுகமாக விட்டதில் வியப்பில்லை.

3. தெருக்கள், தோட்டங்கள் திறக்கப்பட்டதினால். விளைந்த இன்னல்கள்

கண்டிக் குடியானவரையும் பிரதானிகளையும் வெகுவாகப் பாதித்த ஒரு பொதுக் காரணம் மலைநாட்டுக்குத் திறக்கப்பட்ட தெருக்களும் அவற்றின் அடிச்சுவட்டில் தோன்றிய கோப்பித் தோட்டங்களுமாகும்.

மலைநாட்டில் திறக்கப்பட்ட தெருக்களின் பேறாக தம் சுதந்திரம், கிராமிய வாழ்க்கை, அந்தரங்க சீவியம் யாவும் சிதைந்து போவதைக்கண்டு கண்டியர் மனம் புளுங்கினர்.

கோப்பித் தோட்டங்கள் திறக்கப்பட்டதன் பயனாக அவர்களின் நிலை மேலும் சீரழிந்தது. தோட்டப் பிரதேசத்தில் வியாபாரம், சாராயக் குத்தகை, ஏற்றுமதி ஒப்பந்தங்கள், தரகு, தச்சுவேலை போன்ற தொழில் வாய்ப்புக்கள் பெருகவே அவற்றினால் முதன் முதல் நன்மை அடைந்தவர்கள் தாழ் பிரதேசச் சிங்களராவர்.

கண்டி, கம்பளை, பதுளை, நுவர-எலிய என்னும் நகரங்களிலிருந்த கோப்பிப் பிரதேசம் முழுவதும் இவர்களினால் நிறைந்து வழிந்தது. புதிதாக வந்தவர்கள் நாட்டின் மூலைமுடுக்குகளை ஊடறுத்துச் சென்று பாமர மக்களின் அறியாமையையும் எளிமையையும் பயன்படுத்தி, அவர்களை ஏமாற்றிப் பிழைத்தனர். விரும்பத்தகாத பேர்வழிகளும் நீதிக்கு அஞ்சியவர்களும் அங்கு புகலிடம் பெறவே, ஒழுங்கீனம் அதிகரித்தது.

கண்டிப் பிரதேசத்தில் ஒழுங்கீனமும் குற்றங்களும் அதிகரித்தமைக்கு ஒரு முக்கிய காரணம் அரசாங்கம் கடைப்பிடித்த சாராய வியாபாரக் கொள்கையாகும். இவ்வியாபாரத்தினால் கூடுதலான வருவாயைப் பெறத்திட்டமிட்ட அரசாங்கம், கிராமங்கள் தோறும், தவறணைகள் திறக்கப்படுவதை ஆதரித்தது.

## கிராமங்கள் தோறும் சாராய தவறணைகள்

1815 இற்கும் 1848 இற்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் கண்டி மாகாணங்களில் மாத்திரம் 133 தவறணைகள் திறக்கப்பட்டன. இப்பிரதேசத்தில் மது அருந்தும் பழக்கம் ஒரு மாபெரும் தீமையாயிற்று. இதனை வன்மையாகக் கண்டித்த ஸ்க்கினர் தவறணைக்காரரின் நடத்தையைப் பின்வருமாறு வருணிக்கிறார்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்ற பட்டத்தை...

நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தின் முன்பாக கவனயீர்ப்புப் போராட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டது.

அனைத்து பட்டதாரிகளுக்கும் பார பட்சமின்றி வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியே இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது “பட்டம் வீட்டில்; பட்ட தாரிகள் நடுரோட்டில்”, ஒரே ஒரு பரீட் சையில் பறந்து போனது பல பரீட்சை எழுதிப் பெற்ற பட்டம், வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், எமக்கான வாழ்க்கையை நாம் எப்போது வாழ் வது?, படிப்புக்கும் போராட்டம் வேலைக் கும் போராட்டமா?, எல்லோருக்கும் பாரபட்சமின்றி வேலைகளை வழங்க வேண்டும், படித்ததற்குக் கூலித் தொழிலா கடைசி வரைக்கும்?, படித்த வர்கள் இந்த நாட்டின் சாபக்கேடுகளா?, படித்தும் பரதேசிகளாகத் திரிவதா?” - என்று பல கோஷங்களைப் போராட் டக்காரர்கள் எழுப்பினர்.

தமது கோரிக்கைகளை அரசு விரைந்து நிறைவேற்ற வேண்டும் என் றும், இல்லையேல் தொடர்ந்து தாம் பாரிய போராட்டங்களை நடத்துவோம் என்றும் போராட்டக்காரர்கள் தெரிவித் தனர். (ந-7,10,33)

## தையிட்டியில்...

முறையில் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிய வருகிறது.

முன்னதாக தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள தையிட் டிக் கிராமத்தில் பொதுமக்களின் நிலங் களை ஆக்கிரமித்து அமைக்கப்பட் டுள்ள விகாரையைச் சூழவுள்ள காணி களை நிரந்தரமாக விகாரைக்குச் சுவீ கரிக்கும் நோக்கில் அளவீடு செய்வதற் குப் பல தடவைகள் முயற்சிக்கப்பட்ட போதிலும் அதனைப் பொதுமக்கள் தடுத்து நிறுத்தினர்.

இதனால் தம்மால் அளவீடு செய்ய முடியவில்லை என்று யாழ்ப்பாணம் மாவட்ட நிலஅளவைத் திணைக்களம் தனது தலைமை அலுவலகத்துக்கு எழுத்தில் தெரியப்படுத்தியிருந்தது.

அதன் அடிப்படையில் கொழும்பு தலைமை அலுவலக நிலஅளவைத் திணைக்கள உத்தியோகத்தர்களை அழைத்து அவர்கள் மூலம் அளவீடு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

ஏற்கெனவே கீரிமலையில் உள்ள ஜனாதிபதி மாளிகை கடந்த மே 16ஆம் திகதி கொழும்பில் இருந்து வந்த நில அளவை உத்தியோகத்தர்களால் இரகசியமாக அளவீடு செய்யப்பட் டுள்ள நிலையில், தற்போது தையிட்டி விகாரையும் அடுத்த வாரம் இரகசிய மாக அளவீடு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10)

## வடக்குக் கிழக்கு...

வடக்குக்கு விஜயம் செய்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ நேற்று கிளிநொச்சி பாரதி வித்தி யாலயத்துக்கான திறன் வகுப்பறைக் கான கணினிகள் கையளிக்கும் நிகழ் வில் கலந்துகொண்டு உரையாற்றிய போது தெரிவித்தார்.

அங்கு கருத்துரைத்த அவர், எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு அபிவிருத்தி பற்றி பேசிக் கொண்டிருக் கின்றோம். ஆனால் ஒவ்வொரு அரசி யல்வாதிகளும் ஒவ்வொரு கருத்துக் களை கூறி வருகின்றார்கள். சர்வதேச ரீதியாக ஒரு சிமார்ட் முறையிலான கல்வியை அறிமுகப்படுத்துவோம்.

ஸ்மார்ட் நாட்டை உருவாக்கும் பொறுப்பு இந்த அன்பளிப்பின் ஊடாக உங்களுக்கும் உள்ளது இலங்கை யில் 13ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமல்படுத்துவேன் என்ற உறுதிமொழியை உங்களுக்கு நான் கொடுக்கின்றேன்.

சர்வதேச தொழிலாளர் தினத்திலும் நாங்கள் இந்த விடயத்தை அறிவித்தி ருந்தோம்.

எங்களுடைய நாட்டில் சட்ட ரீதி யான அரசியலமைப்பிலே பதின் மூன் றாவது திருத்தச் சட்டம் உள்வாங்கப் பட்டிருக்கின்றது.

எனவே வடக்கு கிழக்கு தெற்கு என்ற பாகுபாடின்றி ஒன்பது மாகா ணங்களிலும் இதனை நடைமுறைப் படுத்துவதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன்.

இந்தப் பிரதேசம் அரசியல் ரீதியாக சமூக ரீதியாக சமய ரீதியாக தமது உரிமைகளை பெற்றுக் கொள்ள வேண் டும் என்றும் அவர் மேலும் தெரிவித் துள்ளார். (ந-7,10,15,31)

## 3ஆவது...

மாலை புதுடில்லியில் உள்ள ஜனாதி பதி மாளிகையில் இடம்பெற்றது

ஜவஹர்லால் நேருவுக்கு பிறகு, தொடர்ந்து 3ஆவது முறையாக பிரத மர் பதவியை ஏற்ற நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாண மும் செய்து வைத்தார். அவரை தொடர்ந்து மத்திய மந்திரிகளும் பதவியேற்றுக் கொண்டனர்.

அவர்களுக்கும் ஜனாதிபதி பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாண மும் செய்து வைத்தார்.

பதவியேற்பு விழாவில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாலைதீவு ஜனாதிபதி முகமது மூயிஸ், சீசெல்ஸ் துணை ஜனாதிபதி அகமது அஃபிப், மொரிஷியஸ் பிரதமர் பிரவிந்த் குமார் ஜுகனாத், நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹால், பூட்டான் பிரதமர் ஷெரிங் தோப்கே ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பிரதமர் மோடியை வாழ்த்தினர். (ந-7,10)

## வந்...

நிலையில் ஜனா திபதி ரணில் விக் கிரமசிங்க கடந்த மாதம் வடக்குக் கான விஜய மொன்றை மேற் கொண்டிருந் தார்.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற் றைய தினம் வடக் கின் பல்வேறு மாவட்டங்களுக் கும் விஜயமொன்றை மேற் கொண்டி ருந்தமை குறிப் பிடத்தக்கது. (ந-7,10)

## அலி...

பின் பேரில், வெளிவிவகார அமைச்சர் ஜனாதி பதி சட்டத்தரணி அலி சப்ரி இன்று ரஷ்யாவுக்குச் செல்லவுள்ளார்.

அந்நாட்டின் நிஸ்னி நோவ்கோ ரோடில் நாளை ஆரம்பமாகவி ருக்கும் பிரிக்ஸ் அமைச்சர்கள் அமர்வில் கலந்து கொள்ளவுள் ளார். (ந-7,10)

## போதை...

போதை மாத் திரைகள் மற்றும் வாள்கள் வைத் திருந்த நான்கு இளைஞர்கள் யாழ். மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பிரிவின ரால் யாழ்ப்பாணத் தில் வைத்து நேற்று மாலை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட போதை மாத் திரைகளும் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் ஆனைக் கோட்டையைச் சேர்ந்த 25, 24 வயதுக் குட்பட்ட இளைஞர்கள் எனப் பொலி ஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளு டாக தெரியவந்துள்ளது. மேலதிக விசா ரணையின் பின்னர் அவர்களை இன்று நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ந-7,10,33)

## ரயில் சாரதிகளின்..

பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித் துள்ளது.

இரண்டாம் வகுப்பு பதவி உயர்வு வழங்குவதில் தாமதம், ஆட்சேர்ப்பில் தாமதம் உள்ளிட்ட பல பிரச்சினைகளை அடிப்படையாக கொண்டு கடந்த 06ம் திகதி நள்ளிரவு 12.00 மணி முதல் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (ந-7,10)


மஹஜன சம்பத — திகதி 2024.06.09 — சீட்டிழுப்பு இலக்கம் 5499 — W 4 9 7 0 3 2 — அத சம்பத W 7 0 3 2 — சீட்டிழுப்பு இலக்கம் 74 — National Lotteries Board

தன நிதானய — திகதி 2024.06.09 — சீட்டிழுப்பு இலக்கம் 1529 — X 09 15 29 35 X — Double Chance 03472

மெகா பவர் — திகதி 09/06/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1847 — V 02 09 12 29 35 — 47673

லக்கி 7 VIP — திகதி 2024.06.09 — சீட்டிழுப்பு இலக்கம் 325 — D 6 7 5 1 3 9 D

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3741 — சீட்டிழுப்பு திகதி 09.06.2024 — Y 21 38 48 50 — Y 86686

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.06.09 — சீட்டிழுப்பு இலக்கம் 0808 — கடகம் 02 18 30 50 கடகம் — 61049 — 21

உத்தியோகபூர்வ முடிவுகள் — 09.06.2024 — வெற்றி வாரம் 207 — புதன் — சுபிரி தன சம்பத — U 8 3 1 9 7 7 — K — அடுத்த சுப்பர் ஜக்போட் 23,656,908.00 — 58095

SUPER BALL — சீட்டிழுப்பு 2473 — 09.06.2024 — ஞாயிறு — 53 65 66 67 M — 29309 — அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ. 92,467,335.20

சசிரி — வெற்றி வாரம் 487 — 2024.06.09 — கபிலம் — 04 21 35 — 76543 — ரூ 2,574,840/-

சனிதா — திகதி 2024.06.09 — வெற்றி வாரம் 4634 — 32 35 62 74 F — அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ.61,129,773.20 — 32653

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4185 — சீட்டிழுப்பு திகதி 2024.06.09 — ஞாயிற்றுக்கிழமை — 37 41 54 57 — கன்னி — அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ. 4,147,346.40 — 449995

கப்ருக — A 22 15 56 72 73 — 1649 — மஞ்சள் — 09.06.2024 — ஞாயிறு — 355408 — அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ. 526,741,297.40

அத கோட்டிபதி ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2299 — 2024.06.09 — அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ. 118,831,764.00 — 43 47 73 75 O — 170319


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா இருபது இலட்சம் 20,00,000/=

(1164)

**Golden Real Estate (pvt) Ltd**
**077 029 4164,**
**077 329 4130, 077 294 1521**


# இந்து சகோதரர்களின் போர் துடுப்பாட்ட சுற்றுப் போட்டி

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் இடையில் இந்துச் சகோதரர்களின் போர் (Battle of the Hindu Brothers) என்னும் பெயரில் துடுப்பாட்டப் போட்டியொன்று முதன்முறையாக ஜூன் மாதம் 14ம், 15ம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதனைத்தொடர்ந்து இரு பாடசாலை பழைய மாணவர்களுக்கான 20க்கு 20 துடுப்பாட்டப் போட்டியும் ஜூன் 16ம் திகதி நடைபெறும்.

நூறுக்கு மேற்பட்ட ஆண்டுகள் பழமை வாய்ந்த இரு பாடசாலைகளின் இந்த துடுப்பாட்டப் போட்டித்தொடர் ஆரம்பமாகும் இப்பாடசாலைகளைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கு பெருவிருந்தாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-7,10)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (1112)

**076 825 7716** (ஆகாஸ்)

## தென்னிந்திய தலயாத்திரை மற்றும் சுற்றுலா

(சென்னை, மதுரை, கன்னியாகுமாரி, திருவனந்தபுரம், ராமேஸ்வரம்)

பிரசித்தி பெற்ற ஆலயங்களை தரிசிப்பதோடு சுற்றுலாத் தளங்களையும் கண்டுகளிக்கலாம்.

(1142)

கட்டணத்தில் உள்ளடங்குபவை: **07 நாட்கள்**

- இருவழி விமானப் பயணச்சீட்டு
- குளிரூட்டப்பட்ட(A/C) வாகனம்
- குளிரூட்டப்பட்ட(A/C) தங்குமிடம்
- மூன்று வேளை உணவு(சைவம்)
- சுற்றுலா மேலாளர்
- நுழைவுக்கட்டணங்கள்
- தேநீர், குளிர்பானங்கள்
- மேலும் பல...

இறையருளுடன் இனிமையான நினைவுகளை உருவாக்கிக்கொள்ள.

தொடர்புகொள்ளுங்கள்: **076 946 4568**

**SRI BABY ENTERPRISES(PVT)LTD**

ராணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்/ மகாத்மா வீதி, நெல்லியடி, யாழ்ப்பாணம்

## பௌதிகவியல் (A/L)
**2024/2025/2026 Repeat**

**தனிப்பட்ட/ குழு வகுப்புக்கள்**
**மீட்டலும் கடந்த கால வினா விடைகளும்**

ஆ.நித்தியானந்தன் BSc, Dip.in.Ed

(1154)

**076 799 9005**
15 B, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## V2 VISA SERVICES
## கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0569)

## கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு

தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.

A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து

(C-0569)

V2 GUEST 0743900360
0743900361

## அமெரிக்க லொத்தர் விசா முடிவுகள் வெளியாகிவிட்டன

நீங்கள் அமெரிக்க அதிஸ்ட விசா வெற்றியாளரா? உடனடியாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.


எமக்கூடாக விண்ணப்பித்தவர்கள் எமது கிளைகளில் நேரடியாக பார்வையிடலாம்.

(C-0569)

ஆரம்ப விண்ணப்பம் முதல் இறுதி விசா நேர்காணல் வரை முழுமையாக உதவ தயாராக உள்ளோம்.


**V2 TRAVELS 0768226244**


# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் திரு.அம்பலவாணர் தில்லையம்பலம்





தோற்றம் 1943.05.25
மறைவு 2023.06.21

தில்லையின் நடராசா நீயே
எங்கள் அம்பலவாணர் தில்லையம்பலமே

நீ கை பார்த்து சொல்லும் சொல்
அது எங்கள் வாழ்வின் தலை எழுத்து

தவறை மன்னிக்கும் ராமனின் குணம் உனக்கு
தாய்க் குலம் போற்றும் உன் தரணி புகழை

நீ கதையின் காரியகாரன் இல்லை
மாறாக அன்பின் பாசக்காரன்

கலை வாரிசு சிற்ப வாரிசு
யாழ் முத்து விருதுகள் பெற்ற
அராலியின் கலைஞானியே நீயே



அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(0092)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.